بسم الله الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 6 | இதழ் 46

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

12 ரபீவுஸ் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 18 நுபுவ்வத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 18 நவம்பர் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيۡنَ اٰمَنُوۡا عَلَيۡكُمۡ اَنۡفُسَكُمۡ‌ۚ لَا يَضُرُّكُمۡ مَّنۡ ضَلَّ اِذَا اهۡتَدَيۡتُمۡ‌ؕ اِلَى اللّٰهِ مَرۡجِعُكُمۡ جَمِيۡعًا فَيُنَبِّئُكُمۡ بِمَا كُنۡتُمۡ تَعۡمَلُوۡنَ

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் உங்களை (மன இச்சைகளிலிருந்து) காப்பாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் நேர்வழியைப் பெற்று விட்டால், வழிதவறிய எவனும் உங்களுக்குத் தீங்கிழைக்க மாட்டான். நீங்கள் எல்லாரும் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது. எனவே நீங்கள் செய்ததனை அப்போது அவன் உங்களுக்கு வெளிப்படுத்துவான். (5:106)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**நான் மெய்யாகவே கூறுகின்றேன். தப்பெண்ணம் மிகவும் தீய விஷயமாகும். மனிதனின் ஈமானை (அது) நாசமாக்கி விடுகின்றது. மேலும் உண்மை மற்றும் நேர்மையிலிருந்து தொலைவில் (மனிதனை) வீசி விடுகின்றது. நண்பர்களை எதிரியாக்கி விடுகின்றது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### தப்பெண்ணம் உண்மையின் வேரை துண்டிக்கக்கூடிய விஷயம் ஆகும்

இதை நன்றாக நினைவிற் கொள்ளுங்கள். அனைத்து சீர்கேடுகளும், தீமைகளும் தப்பெண்ணத்தால் உருவாகின்றன. எனவே தான் அல்லாஹ் இதிலிருந்து மிகவும் தடுத்துள்ளான். மேலும் اِنَّ بَعۡضَ الظَّنِّ اِثۡمٌ (நிச்சயமாக சில யூகங்கள் பாவமாகும்) என்று அல்லாஹ் கூறுகின்றான். மவ்லவி எம் மீது தப்பெண்ணம் கொள்ளவில்லையென்றால் மேலும் உண்மை மற்றும் உறுதித்தன்மையுடன் எம்மிடம் வந்து எமது கூற்றுகளையும், எமது புத்தகங்களையும் படித்து எம்மிடம் தங்கி எமது நிலைமைகளை கண்டு கொண்டால் அவர்கள் எம் மீது சுமத்துகின்ற குற்றச்சாட்டுகளை சுமத்த மாட்டார்கள். ஆனால் அவர்கள் அல்லாஹ்வின் இந்த வழிகாட்டலை கண்ணியப்படுத்தாதபோதும், அதன்படி செயல்படுத்தாததன் விளைவாகவும் அவர்கள் என் மீது தப்பெண்ணம் கொண்டுள்ளனர். மேலும் எனது ஜமாஅத்தின் மீதும் தப்பெண்ணம் கொண்டுள்ளனர். மேலும் பொய்யான குற்றச்சாட்டுகளையும், அவதூறுகளையும் சுமத்த தொடங்கி விட்டனர். எந்த அளவுக்கென்றால் இவர்கள் (அஹ்மதிகள்) நாத்தீகர்களின் கூட்டம் என்றும், இவர்கள் தொழுவதில்லை. நோன்பு நோற்பதில்லை என்றும் துணிவுடன் அவர்களில் சிலர் எழுதியுள்ளனர். தற்போது அவர்கள் (எதிரிகள்) இந்த தப்பெண்ணத்திலிருந்து விலகி இருந்தால் அவர்களுக்கு பொய்யின் சாபத்தின் கீழ் வந்திருக்க நேரிட்டிருக்காது. மேலும் அதிலிருந்து அவர்கள் தப்பித்திருப்பார்கள்.

நான் மெய்யாகவே கூறுகின்றேன். தப்பெண்ணம் மிகவும் தீய விஷயமாகும். மனிதனின் ஈமானை (அது) நாசமாக்கி விடுகின்றது. மேலும் உண்மை மற்றும் நேர்மையிலிருந்து (மனிதனை) தொலைவில் வீசி விடுகின்றது. நண்பர்களை எதிரியாக்கி விடுகின்றது. மனிதன் தப்பெண்ணத்திலிருந்து விலகி இருப்பது

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

## நபிமொழி

1496: ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் மஆஸ் பின் ஜபல் (ரலி) அவர்களை யமனை நோக்கி அனுப்பியபோது அன்னாரிடம் கூறினார்கள்: நீர் வேதத்தையுடைய சமுதாயத்திடம் செல்கிறீர். அவர்களிடம் சென்றடைந்து விட்டால் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை. முஹம்மது (ஸல்) அல்லாஹ்வின் தூதராவார் என்று (ஏகத்துவத்திற்கு) சாட்சி சொல்லும் படி அவர்களை அழைப்பீராக. அதற்கு அவர்கள் (இசைந்து) உமது கூற்றை ஏற்றுக் கொண்டு விட்டால் பின்னர் அல்லாஹ் பகலிலும், இரவிலும் ஐவேளை தொழுகைகளை நிர்ணயித்துள்ளான் என்பதை அவர்களுக்கு கூறுவீராக. அவர்கள் உமது இந்த கூற்றையும் ஏற்றுக் கொண்டு விட்டால் பின்னர் நிச்சயமாக அல்லாஹ் அவர்களில் செல்வந்தர்களிடமிருந்து வசூலிக்கப்படுகிற தருமத்தை (ஸகாத்தை)யும் அவர்கள் மீது கடமையாக்கியுள்ளான் என அவர்களுக்கு கூறுவீராக. அவர்கள் உமது இந்த கூற்றையும் ஏற்றுக் கொண்டு விட்டால் பின்னர் கருத்திற் கொள்ளவும். அவர்களின் சிறந்த செல்வங்களை வசூலிக்க வேண்டாம். அநீதி இழைக்கப்பட்டவரின் பிரார்த்தனைக்கு அஞ்சிக் கொள்ளவும். ஏனெனில் அவருக்கும் இறைவனுக்கும் மத்தியில் எந்தத் தடையுமில்லை.

(ஸஹீஹ் புகாரி)

**சூரா ஃபாத்திஹா திருக்குர்ஆனின் ஆற்றல்கள் மற்றும் வல்லமைகளின் சாறு ஆகும். இது உள்ளபடியே சுருக்கமான வெறும் ஏழு வசனங்கள் தான். ஆயினும் முழுத் திருக்குர்ஆனின் பொருளும் சுருக்கமாக இதில் வந்து விட்டன**

وَلَقَدۡ اٰتَيۡنٰكَ سَبۡعًا مِّنَ الۡمَثَانِىۡ وَالۡقُرۡاٰنَ الۡعَظِيۡمَ (15:88)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

அல்லாஹ் கூறுகின்றான்: நாம் உங்களுக்கு வெறும் ஏழு வசனங்களை உள்ளடக்கிய மற்றும் மீண்டும் மீண்டும் ஓதப்படும் சூரா ஃபாத்திஹா போன்ற அருட்கொடையை வழங்கியுள்ளோம். மஸானி என்பதன் பொருளை நாம் ஏற்கனவே அகராதி சொற்பொருளின் விளக்கத்தில் கூறி இருக்கின்றோம். அதாவது மஸானி என்பதற்கு ஒரு பொருளின் ஆற்றல் மற்றும் வல்லமை ஆகியவற்றிற்கு கூறப்படும். சூரா ஃபாத்திஹாவை மஸானி என்று இறைவன் கூறியவாறு அதில் திருக்குர்ஆனின் ஆற்றல்கள் மற்றும் வல்லமைகளின் சாறு இருப்பதாக இறைவன் கூறியுள்ளான். சூரா ஃபாத்திஹா திருக்குர்ஆனின் ஆற்றல்கள் மற்றும் வல்லமைகளின் சாராம்சம் ஆகும். இது உள்ளபடியே சுருக்கமான வெறும் ஏழு வசனங்கள் தான். ஆயினும் முழுத் திருக்குர்ஆனின் கருத்தும் சுருக்கமாக இதில் வந்து விட்டது. குர்ஆனே அழீம் என்பதன் பொருள் மீதமுள்ள திருக்குர்ஆனையும் குறிக்கின்றது. அதன் கருத்து என்னவென்றால், சூரா ஃபாத்திஹா என்ற சுருக்கமான திருக்குர்ஆனையும் நாம் வழங்கியுள்ளோம். மேலும் விரிவான திருக்குர்ஆனையும் நாம் வழங்கியுள்ளோம். இதன் பொருள் சூரா ஃபாத்திஹாவும் ஆகும். இந்நிலையில் இதன் பொருள் என்னவாக இருக்குமென்றால், சூரா ஃபாத்திஹா திருக்குர்ஆனின் ஒரு மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். திருக்குர்ஆன் என்றால் முழுத் திருக்குர்ஆன் என்று பொருளல்ல. மாறாக, திருக்குர்ஆனின் பகுதி என்று பொருள்படும். இது ஒரு சொற்றொடர் ஆகும். அதாவது சில சமயம் (ஒரு) பகுதிக்கு (முழுவதும்) என்ற சொல் கூறப்படுகின்றது. உதாரணமாக திருக்குர்ஆனை கேளுங்கள் என்று பொதுவாக மக்கள்

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

## இந்த இதழில்

*திருக்குர்ஆன்*

*நபிமொழி*

*மல்ஃபூஸாத்*

*தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )*

*குத்பா பேருரை 15 அக்டோபர் 2021 (முழுவதுமாக)*

*முக்கியமான கேள்விகளுக்கு பதில்: ஹுஸூர் (அய்ய)*

*ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் கேம்பியாவின் செயற்குழுவின் காணொலி சந்திப்பு*

*ஹுஸூர் (அய்ய) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் 2013*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 15 அக்டோபர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அஹா** மாதம் **15 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தைப் பற்றிய குறிப்பு கடந்த குத்பாவில் எடுத்துரைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக எடுத்துரைக்கப்பட வேண்டிய மேலும் சில விஷயங்கள் உள்ளன. சஹீஹ் புகாரியின் சில அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ள விஷயங்களிலிருந்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடந்தபோதே ஃபஜர் தொழுகையும் நிறைவேற்றப்பட்டது என்றும், மேலும் அந்த நேரத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பள்ளிவாசலிலேயே தான் இருந்தார்கள் என்றும் தெரிய வருகிறது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உடனடியாக வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டார்கள். தொழுகை பின்னர் நிறைவேற்றப்பட்டது என்று மற்றோர் அறிவிப்பிலிருந்து தெரிய வருகின்றது.

உதாரணமாக, புகாரியின் விரிவுரையாளரான அல்லாமா இப்னு ஹிஜ்ர் அவர்கள் இந்த அறிவிப்பின் குறிப்பில் ஓர் அறிவிப்பை பதிந்தவாறு இவ்வாறு எழுதியுள்ளார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அதிகமான இரத்தப் போக்கு ஏற்பட்டபோது அன்னார் மயக்கமடைந்து விட்டார்கள். அப்போது நான் அன்னாரை மக்களுடன் சேர்ந்து தூக்கினேன். மேலும் அன்னாரை வீட்டிற்கு கொண்டு சேர்த்தேன். அன்னார் மீது மயக்கம் சூழ்ந்திருந்தது. எந்த அளவுக்கென்றால் அதிகாலைபொழுது விடிந்திருந்தது. அன்னாருக்கு மயக்கம் தெளிந்தபோது, மக்கள் தொழுது விட்டார்களா? என்று எங்களிடம் கேட்டார்கள். ஆம்! என்று நான் கூறினேன். தொழுகையை கைவிட்டவருக்கு எந்த இஸ்லாமும் இல்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள். பின்னர் அன்னார் (ரலி) வுளு செய்து தொழுதார்கள்.

(ஃபத்ஹுல் பாரி, தொகுதி 7 பக்கம் 64 ஹதீஸ் எண் 3700 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபத்தில் அச்சிடப்பட்டது & அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 263 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதுமட்டுமின்றி தப்காத்துல் குப்ராவிலும் இவ்வாறு உள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை தூக்கிக் கொண்டு வீட்டிற்கு கொண்டு சேர்த்தனர். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் திருக்குர்ஆனிலேயே மிகவும் சிறிய இரண்டு சூராக்களான وَالْعَصْرِ மற்றும் إِنَّآ أَعْطَيْنٰكَ الْكَوْثَرَ ஆகியவற்றை ஓதினார்கள். மற்றோர் இடத்தில் وَالْعَصْرِ மற்றும் قُلْ يٰٓاَيُّهَا الْكٰفِرُوْنَ ஓதியதாக குறிப்பு உள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 266 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியை குறிப்பிட்டவாறு தப்காத்துல் குப்ராவில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடந்தபோது அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், செல்லுங்கள். சென்று யார் என்னை கொலை செய்ய முயற்சி செய்தார்? என்பதை விசாரித்து வாருங்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் சென்றேன். மேலும் வீட்டின் கதவை திறந்தேன். அப்போது மக்கள் ஒன்று கூடியிருப்பதை பார்த்தேன். அந்த மக்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நிலையைக் குறித்து அறியாதவர்களாக இருந்தார்கள். யார் அமீருல் மூமினீன் அவர்களை கத்தியால் குத்தியது? என்று நான் கேட்டேன். அப்போது அல்லாஹ்வின் எதிரியான அபுலூலூ என்பவன் அன்னாரை கத்தியால் குத்தினான். அவன் முகைரா பின் ஷஃபாவின் அடிமையாவான். அவன் மற்ற மக்களையும் காயப்படுத்தி இருந்தான். ஆனால் அவன் பிடிபட்டபோது அப்போது அதே கத்தியால் தற்கொலை செய்து கொண்டான் என்று அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 263 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் ஒரு சதித்திட்டத்தின் விளைவாக இருந்ததா? அல்லது தனிப்பட்ட பகைமையாக இருந்ததா? என்பது தொடர்பாக சில வரலாற்று ஆசிரியர்கள் இவ்வாறும் எழுதியுள்ளனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவம் வெறும் தனிப்பட்ட பகைமையின் அடிப்படையில் இருந்திருக்கவில்லை. மாறாக, அது ஒரு சதித்திட்டமாக இருந்தது. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மாபெரும் வீரரான கலீஃபா ஷஹீதாக்கப்பட்டு விட்டார்கள். பொதுவாக வரலாற்று ஆசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள் ஷஹாதத் சம்பவத்தை விளக்கத்துடன் எடுத்துரைத்த பிறகு மௌனமாகி விடுகின்றார்கள். மேலும் அபுலூலூ என்பவன் ஒரு தற்காலிக உணர்வாலும், கோபத்தாலும் அன்னாரை கொலை செய்து விட்டான் என்ற தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

ஆனால் சில வரலாற்றாசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள் இது பற்றி விரிவான விவாதம் செய்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: இது ஒரு தனி நபரின் கோபத்தின் காரணமாக நடைபெற்ற பழிவாங்கும் நடவடிக்கை கிடையாது. மாறாக இது ஒரு சதித்திட்டமாக இருந்தது. மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் முறையாக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சதித்திட்டத்தின் அடிப்படையில் கொலை செய்யப்பட்டிருந்தார்கள். இந்த சதித்திட்டத்தில் முஸ்லிமாக மாறி மதீனாவில் வசித்து வந்த ஈரானிய தளபதியான புர்முஸான் என்பவனும் பங்கு பெற்றிருந்தான்.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த கொலையை ஒரு சதித்திட்டமாக இருந்தது என்பது குறித்து முந்தைய வரலாற்றாசிரியர்கள் மற்றும் வாழ்க்கை வரலாற்றை எழுதக் கூடியவர்கள் விவாதிக்கவில்லை என்று தற்காலத்து நூலாசிரியர்கள் முறையீடு செய்துள்ளனர்.

(அல் பிதாயா மற்றும் அந்நிஹாயா தொகுதி 4 பக்கம் 144 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஆயினும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையில் புர்முஸான் மற்றும் ஜுஃபைனா ஆகியோரின் கை இருந்ததாக வரலாற்று புத்தங்களில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த புத்தகமான அல் பிதாயா மற்றும் அந்நிஹாயா ஆகிய நூல்களில் மட்டும் குறிப்பு கிடைக்கின்றது. இதே நூலாசிரியர்களில் ஒருவரான முஹம்மது ரஸா சாஹிப் சீரத் உமர் ஃபாரூக் என்ற தமது புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்:

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பருவமடைந்த கைதி ஒருவரை மதீனாவிற்கு வருவதற்க அனுமதி வழங்கவில்லை. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் முகைரா பின் ஷுஃபா கூஃபாவில் அன்னாரின் பெயரில் ஒரு கடிதம் எழுதினார். அதாவது மிகவும் திறமைசாலியான ஓர் அடிமை என்னிடம் உள்ளான். அவன் மதீனாவிற்கு வருவதற்கு அனுமதி வேண்டுகிறான். அவன் நிறைய பணிகளை அறிந்துள்ளான். அதில் மக்களுக்கும் நிறைய நன்மைகள் உள்ளன. அவன் கொல்லன் ஆவான். கலைகளிலும் நிபுணராக உள்ளான்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஹஸ்ரத் முகைரா (ரலி) அவர்களின் பெயரால் கடிதம் எழுதினார்கள். அன்னார் அவரை மதீனாவிற்கு அனுப்புவதற்கு அனுமதி வேண்டினார்கள். ஹஸ்ரத் முகைரா (ரலி) அவர்கள் அவருக்கு 100 தர்ஹம் மாதாந்திர வரி விதித்திருந்தார். அவர் ஹஸ்ரத் உமர்

(ரலி) அவர்களிடம் வந்தார். மேலும் கராஜ் வரி கூடுதலாக இருப்பதாக முறையிட்டார். நீர் எந்த பணியை நல்ல முறையில் செய்கின்றீர்? என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். அதற்கு தான் எதில் மிகவும் சிறப்பான நிபுணத்துவம் பெற்றிருந்தானோ அந்தப் பணியை அவன் கூறினான். அப்போது உனது பணியின் நிபுணத்துவத்தின் அடிப்படையில் பார்த்தால் உமக்கு விதிக்கப்பட்ட கராஜ் வரி கூடுதல் ஒன்றும் இல்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது கோபம் கொண்டு அவன் திரும்பிச் சென்று விட்டான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சில நாள் வரை காத்திருந்தார்கள். ஒரு நாள் அதே அடிமை அன்னாரை கடந்து சென்றான். அப்போது நீர் காற்றால் இயங்கக்கூடிய உரலை மிக நன்றாக தயாரித்து விடுவதாக எனக்கு தகவல் கிடைத்துள்ளது என்று அவனை அழைத்து அவனிடம் கூறினார்கள்.

அந்த அடிமை கோபம் மற்றும் வெறுப்பின் நிலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நோக்கி பார்த்தான். நான் உங்களுக்காக எப்படிப்பட்ட ஒரு உரலை உருவாக்குவேன் என்றால் மக்கள் அதைப் பற்றி அதிகம் சர்ச்சை செய்வார்கள் என்று அவன் கூறினான். அந்த அடிமை திரும்பியபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம்முடன் இருந்த சஹாபிகளை பார்த்தார்கள். மேலும் இந்த அடிமை எனக்கு இப்போது தான் மிரட்டல் விடுத்து (சென்று)ள்ளான் என்று கூறினார்கள்.

சில நாட்கள் கழிந்தன. அபூலூலூ தனது போர்வையில் இரு முனைகளைக் கொண்ட கத்தியை ஒளித்து வைத்திருந்தான். அவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் நடத்தினான். ஏற்கனவே ஷஹாதத் சம்பவங்கள் எடுத்துரைக்கப்பட்டிருந்ததுபோன்று அவன் தாக்குதல் நடத்தினான். அவனது ஒரு தாக்குதல் தொப்புளுக்கு கீழ் அமைந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது ஒரு வகையில் பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் அபூலூலாவிற்கு இருந்தது. ஏனென்றால் அரேபிகள் அவனது பகுதிகளை வெற்றி கொண்டு விட்டனர். மேலும் அவனை கைதியாக்கி அவனது அரசனை இழிவடைந்த நிலையில் நாட்டை துறக்கும்படி நிர்பந்தப்படுத்தி விட்டனர் என்று அவன் கோபம் கொண்டிருந்தான். அவன் ஒரு சிறிய கைதியின் குழந்தையை பார்க்கும்போதெல்லாம் அவர்களுக்கு அருகில் வந்து அவர்களின் தலையில் கையை வைத்து தடவி விடுவான். மேலும் அரபிகள் எனது உள்ளத்தை நொறுக்கி விட்டனர் என்று அழுது கொண்டே கூறுவான். அபூலூலூ ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்குவதற்கு உறுதியான எண்ணம் கொண்டு விட்டான். அப்போது அவன் சிறிய ஏற்பாட்டுடன் இரண்டு கூர்மையான முனைகளைக் கொண்ட கத்தியை தயாரித்தான். அதனை கூர்மையாக்கிக் கொண்டான். பின்னர் அதில் விஷத்தை தடவினான். பின்னர் அதை எடுத்துக் கொண்டு அவர் பூர்முஸானிடம் வந்தான். மேலும் இந்த கத்தியைப் பற்றி உமது எண்ணம் என்ன? என்று கேட்டான். அதற்கு அவன் நீர் இந்த கத்தியைக் கொண்டு யாரை தாக்கினாலும் அவர் இறந்து விடுவார் என்பது எனது எண்ணமாகும் என்று கூறினார்.

பூர்முஸான் பாரசீகர்களின் தளபதிகளில் ஒருவனாக இருந்தான். முஸ்லிம்கள் அவனை துஸ்தூர் என்ற இடத்தில் கைது செய்திருந்தனர். மேலும் அவர்கள் அவனை மதீனாவிற்கு அனுப்பி இருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அவன் பார்த்தபோது அன்னாரின் மெய்க்காப்பாளர்கள் எங்கே? என்று அவன் கேட்டான். ஏற்கனவே இது குறித்து கூறப்பட்டுள்ளது. அன்னாருக்கு எந்த மெய்க்காப்பாளரும் கிடையாது. எந்த தனிச்செயலரும் கிடையாது. எந்த ஊழியரும் கிடையாது என்று சஹாபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்கள் கூறினர். அப்போது அன்னார் நபியாக இருக்க வேண்டுமே என்று அவன் கூறினான். எவ்வாறிருப்பினும் பின்னர் அவன் முஸ்லிமாகி விட்டான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனுக்கு 2000 திர்ஹம் நியமித்தார்கள். மேலும் அவனை மதீனாவில் தங்க வைத்தார்கள்.

தப்காத்தே இப்னு சஅதில் நாஃபியின் சான்றிலிருந்து ஒரு அறிவிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட அந்த கத்தியை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் கண்டார்கள். நான் கடந்த நாள் இந்த கத்தியை பூர்முஸான் மற்றும் ஜுஹைனாவிடம் பார்த்தேன் என்று அன்னார் கூறினார்கள். அப்போது இந்த கத்தியைக் கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள்? என்று நான் கேட்டேன். நாங்கள் இதைக் கொண்டு இறைச்சியை வெட்டுவோம். ஏனென்றால் நாங்கள் இறைச்சியை தொடுவதில்லை என்று அவன் கூறினான். அப்போது ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்களிடம் தாங்கள் இந்த கத்தியை அவர்கள் இருவரிடமும் தாங்கள் பாத்தீர்களா? என்று கேட்டார். அதற்கு ஆம் என்று அன்னார் கூறினார்கள். எனவே ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் தனது வாளை எடுத்துக் கொண்டு அவர்கள் இருவரிடமும் சென்றார்கள். மேலும் அவர்களை கொலை செய்து விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் அவர்களை அழைத்தார்கள். அன்னாரிடம் வந்தபோது நீங்கள் இந்த இரு நபர்களையும் கொலை செய்வதற்கு எந்த விஷயம் உங்களை தூண்டியது? அவர்கள் இருவரும் நமது அடைக்கலத்தின் கீழ் உள்ளனர் என்று அன்னார் கேட்டார்கள். இதைக் கேட்ட உடனேயே ஹஸ்ரத் உபைதுல்லாஹ் அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை பிடித்து நிலத்தில் வீழ்த்தி விட்டார்கள். எந்த அளவுக்கென்றால் மக்கள் முன்னே சென்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களிடமிருந்து காப்பாற்றினர். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அவரை அழைத்தபோது அவர் அதாவது ஹஸ்ரத் உபைதுல்லாஹ் அவர்கள் வாளை தாங்கிப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் (ரலி) அவர்கள் வரை கடுமையாக கண்டித்தவாறு அதனை கீழே போடும்படி கூறினார்கள். அவரும் வாளை கீழே வைத்து விட்டார்.

சயீத் பின் முஸைய்யப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இது நான் முன்னர் கூறிய ஓர் அறிவிப்பாகும். இது எந்த அளவிற்கு உண்மை என்று தெரியவில்லை. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் சம்பவம் எந்த அளவுக்கு சரியானது என்று தெரியவில்லை. அல்லாஹ்வே நன்கறிவான். ஆனால் எவ்வாறிருப்பினும் கொலை செய்யப்பட்ட சம்பவம் மேலும் பல இடங்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியான அபூலூலூவை நான் கடந்து சென்றேன். அப்போது ஜுஃபைனா மற்றும் பூர்முஸான் அவனுடன் இருந்தனர். அவர்கள் இரகசியமாக பேசிக் கொண்டிருந்தனர். நான் திடீரென அவர்களிடம் சென்றபோது அவர்கள் பயந்து எழுந்து நின்றனர். அப்போது அவர்களுக்கு மத்தியில் ஒரு கத்தி கீழே விழுந்தது. அதற்கு இரண்டு முனைகள் இருந்தன. எந்த கத்தியைக் கொண்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்களோ அது எப்படி உள்ளது? என்று அன்னார் பார்த்தபோது அந்த கத்தி ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபூபக்ர் (ரலி) அவர்கள் எடுத்துரைத்த அதே கத்தியாகவே இருந்தது.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து இதை கேட்டபோது வாளை ஏந்திக் கொண்டு புறப்பட்டார்கள். மேலும் பூர்முஸானை அழைத்தார்கள். அவன் அவர்களிடம் வந்தபோது என்னுடன் செல்லும் என்று அவனிடம் கூறினார்கள். எந்த அளவுக்கென்றால் நாங்கள் எங்களது குதிரையை பார்த்தோம். மேலும் அன்னார் அவனிடமிருந்து விலகிக் கொண்டார்கள். அவன் அன்னாரை கடந்து சென்றபோது அன்னார் அவனை வாளால் தாக்கினார்கள்.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அவன் வாளின் வேகத்தை உணர்ந்தபோது லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறினான். ஹஸ்ரத் உபைதுல்லாஹ் கூறுகின்றார்கள்: நான் ஜுஃபைனாவை அழைத்தேன். அவன் ஹீராவின் கிறிஸ்துவர்களில் ஒரு கிறிஸ்துவனாக இருந்தான். அவன் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்களின் உதவியாளனாக இருந்தான். அன்னார் அவனை சமாதானத்திற்காக மதீனாவிற்கு அனுப்பி இருந்தார்கள். அவன் மதீனாவில் எழுதுவதற்கு கற்றுக் கொடுத்து வந்தான். நான் அவனை வாளால் தாக்கியபோது அவன் தனது கண்களுக்கு முன்னால் சிலுவைக்கான அடையாளத்தை வடித்தான். பின்னர் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) முன்னேறிச் சென்றார்கள். மேலும் தன்னை முஸ்லிம் என்று வாதிட்டுக் கொண்டிருந்த அபூலூலூவின் மகளை கொலை செய்து விட்டார்கள். இன்று மதீனாவில் எந்தவொரு கைதியையும் உயிருடன் விட்டு வைக்க மாட்டேன் என்பது ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களின் எண்ணமாக இருந்தது.

முஹாஜிர்கள் அன்னாருக்கு எதிராக ஒன்றுகூடினர். மேலும் அன்னாரை தடுத்தனர். மேலும் அன்னாரை எச்சரித்தனர். அப்போது அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் நிச்சயமாக இவர்களை கொலை செய்து விடுவேன் என்று அன்னார் கூறினார்கள். அவர் முஹாஜிர்களின் கட்டுப்பாட்டிலும் வரவில்லை. எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அன்னாருடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். அதன் விளைவாக அன்னார் வாளை ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்தார்கள். அடுத்து ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் அன்னாரிடம் வந்தார்கள். அப்போது அவர்கள் இருவரும் ஒருவர் மற்றவரின் நெற்றியின் முடியை பிடித்துக் கொண்டனர். சுருக்கமாக அன்னார் பூர்முஸான், ஜுஃபைனா மற்றும்

அபூலூலூவின் மகள் ஆகியோரை கொலை செய்து விட்டார்கள்.

யார் அபூலூலுவை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கொலை செய்யும்படி தூண்டியது? என்பது குறித்த அனைத்து விவகாரங்களும் தற்போது விவாதிக்கப்பட்டு விட்டன. எழுதக்கூடியவர் இவ்வாறு எழுதுகின்றார்: நம்மை வந்தடைந்த அறிவிப்புகள் இந்த விஷயத்தை உறுதிப்படுத்துகின்றன. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலை ஒரு சதித்திட்டமாக இருந்தது என்பதை அவை எடுத்துரைக்கின்றன. புர்முஸான் இந்த சதித்திட்டத்தை தீட்டி இருந்தான். அவன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எதிராக அபூலூலூவின் உள்ளத்தில் பகைமையையும், காழ்ப்புணர்ச்சியையும் மேலும் மூட்டியிருந்தான். அவர்கள் இருவரும் அரபி அல்லாதவர்களாக இருந்தனர். புர்முஸான் கைது செய்யப்பட்டபோது அவன் மதீனாவிற்கு அனுப்பப்பட்டிருந்தான். கலீஃபா தன்னை கொலை செய்து விடுவார்கள் என்பதை கருத்தில் கொண்டு அவன் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டான்.

தப்காத்தே இப்னு சஅதில் நாஃபி அவர்களின் அறிவிப்பு இவ்வாறு இடம் பெற்றுள்ளது. எந்த கத்தியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டிருந்தார்களோ அந்த கத்தியை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் பார்த்தார்கள். சயீத் பின் முஸைய்யப் அவர்களின் அறிவிப்பு தபரியில் இடம் பெற்றுள்ளது. அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் அவர்கள் அந்த கத்தியை பார்த்தார்கள். அது அபூலூலூ, ஜுஃபைனா மற்றும் புர்முஸான் ஆகியோருக்கு மத்தியில் விழுந்து கிடந்தது. அன்னார் அவர்களிடம் திடீரென வந்தபோது அவர்கள் எழுந்து நடந்ததன் காரணத்தால் அது விழுந்து விட்டது. ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்களிடமிருந்து இந்த விஷயத்தை கேட்டபோது உடனடியாக அவர்களிடம் சென்றார்கள். மேலும் அவர்கள் இருவரையும் கொன்று விட்டார்கள். மேலும் அன்னார் அத்துடன் நிற்கவில்லை. மாறாக, அன்னார் பழிவாங்கும் உணர்வுக்கு இலக்காகி அபூலூலூவின் மகளையும் கொன்று விட்டார்கள்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் எந்த கத்தியை குறித்து கூறியிருந்தார்களோ அந்த கத்தியைக் கொண்டே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டிருந்தார்கள். ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் புர்முஸான் மற்றும் ஜுஃபைனாவை கொலை செய்வதில் விரைந்து செயல்படாமல் இருந்திருந்தால் அந்த விவகாரம் குறித்து அவர்கள் இருவரையும் விசாரணைக்கு அழைத்திருக்க முடியும். இவ்வாறு அந்த சதித்திட்டம் வெளிப்பட்டிருக்கும். இந்த அனைத்து விஷயங்களையும் கருத்தில் கொண்டால் இதுவொரு திட்டமிட்ட சதியாக இருந்தது என்பதை பட்டப்பகலைப் போன்று புரிந்து கொள்ள முடியும். மேலும் யார் இந்த சதித்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுத்தார்? என்பதையும் விசாரித்திருக்க முடியும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியாகவும், இந்த சதித்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுத்தவனாகவும் அபூலூலூ இருந்தான். இவை இந்த சதித்திட்டம் குறித்து கூறப்படும் விஷயங்களாகும்.

(முஹம்மது ரஸா அவர்கள் எழுதிய சீரத் உமர் ஃபாரூக் என்ற நூல் பக்கம் 340 – 344)

இதேபோன்று ஒரு வரலாற்றாசிரியர் டாக்டர் முஹம்மது ஹுஸைன் ஹேகல் தனது புத்தகத்தில் இவ்வாறு எழுதுகின்றார்கள்: ஈரானியர்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் மீது முஸ்லிம்கள் வெற்றி கொண்டபோதும் மேலும் அந்த நாடுகளின் ஆட்சி அரசாங்கத்தை அவர்கள் நிர்வகிக்க துவங்கியபோதும் ஈரானிய அரசனுக்கு படிப்பினைக்குரிய தோல்வியைக் கொடுத்து தப்பி ஓடும்படி நிர்பந்தித்தபோதும் ஈரானியர்கள், யூதர்கள் மற்றும் கிறிஸ்துவர்கள் தமது உள்ளங்களில் அரேபியர்களுக்கு எதிராக பொதுவாகவும், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு எதிராக குறிப்பாகவும் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் உணர்வுகளை மறைத்து வந்தனர். அப்போது மக்கள் தமது உரையாடலில் அந்தப் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியை குறிப்பிடவும் செய்தார்கள். அந்த நேரத்தில் தன்மீது தாக்குதல் நடத்திய அபூலூலூ ஒரு ஈரானியன் ஆவான் என்பதை அறிந்து கொண்ட பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியிருந்த அந்த கூற்றும் அவர்களுக்கு நினைவுக்கு வந்தது. என்னிடத்தில் மார்க்கமற்ற எவரையும் இழுத்துக் கொண்டு வர வேண்டாம் என்று நான் உங்களை தடுத்திருந்தேன். ஆனால் நீங்கள் எனது பேச்சை கேட்கவில்லை என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறியிருந்தார்கள். மதீனாவில் இந்த அரபி அல்லாத மார்க்கமற்ற மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தது. ஆனால் உள்ளங்களில் கோபமும், பழிவாங்கும் உணர்வும் நிறைந்திருந்தது. அவர்களின் உள்ளங்களில் பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.

யாருக்கு தெரியும்? இந்த மக்களே சதித்திட்டத்தை தீட்டியிருக்கக் கூடும். மேலும் அபூலூலூவின் இந்த செயல் அதே சதித்திட்டத்தின் விளைவாக இருந்திருக்கக் கூடும். இஸ்லாத்தின் எதிரிகள் தமது பகைமை மற்றும் காழ்ப்புணர்ச்சியின் தாகத்தை தணிப்பதற்காக அந்த வலையை விரித்திருந்தனர். மேலும் இதன் மூலம் அரேபியர்களின் ஒற்றுமையை தூள்தூளாக்கி முஸ்லிம்களின் கரத்தை பலவீனமாக்கி விடலாம் என்று அவர்கள் கருதியிருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் புதல்வர் உண்மை நிலவரத்தை அறிந்து கொள்வதில் எல்லோரையும் விட மிகவும் நிம்மதியிழந்து இருந்தார். ஒருவேளை அபூலூலூ ஃபிரோஸ் தற்கொலை செய்யாமல் இருந்திருந்தால் இந்த இரகசியத்தின் திரையை அகற்றி அதன் ஆழம் வரை சென்றிருக்கக் கூடும். ஆனால் அவன் தற்கொலை செய்து கொண்டான். மேலும் அந்த இரகசியத்தை தன்னுடன் கபருக்கு கொண்டு சென்று விட்டான். அவ்வாறு சென்றதால் இந்த விஷயம் முடிந்து விட்டதா? தற்போது இந்த இரகசியத்தை பெறுவதற்கு எந்த வழியும் இல்லையா?

அந்த வரலாற்றாசிரியர் எழுதுகின்றார்: இந்த சதித்திட்டத்தின் திரையை அகற்றியவாறு அவர் இவ்வாறு எழுதுகின்றார்: இது சதித்திட்டம்மாக இருந்ததா? இல்லையா? இறைநியதியின் ஊழியர்கள் அரேபியர்களின் ஒரு தலைவர் இந்த இரகசியத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் இந்த சதித்திட்டத்தின் பக்கம் கவனமூட்ட வேண்டும் என்றும் விரும்பினர். எந்த கத்தியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டிருந்தார்களோ அந்த கத்தியை ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்கள் கண்டார்கள். மேலும் நான் இந்த கத்தியை நேற்று புர்முஸான் மற்றும் ஜுஃபைனாவிடம் பார்த்தேன் என்றும் அன்னார் கூறினார்கள். மேலும் இந்த கத்தியைக் கொண்டு நீங்கள் என்ன செய்வீர்கள்? என்றும் நான் கேட்டேன். நாங்கள் இறைச்சியை வெட்டுவோம். ஏனென்றால் நாங்கள் இறைச்சியை தொடுவதில்லை என்று அவர்கள் கூறினர்.

ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியான அபூலூலூவை கடந்து சென்றேன். ஜுஃபைனா மற்றும் புர்முஸான் அவனுடன் இருந்தனர். மேலும் அவர்கள் தங்களுக்குள் இரகசியமாக பேசிக் கொண்டிருந்தனர். நான் திடீரென அவர்களை அடைந்தேன். அப்போது அவர்கள் பதறி விட்டனர். அவர்களுக்கு மத்தியில் ஒரு கத்தி விழுந்தது. அதற்கு இரண்டு முனைகள் இருந்தன. எந்த கத்தியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்களோ அதே கத்தி தானா? என்று பாருங்கள். மக்கள் பார்த்தபோது ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) அவர்கள் கூறியிருந்த அதே கத்தியாகவே அது இருந்தது. பின்னர் இந்த விவகாரத்தில் எந்த சந்தேகமும் எஞ்சியிருக்கவில்லை.

வரலாற்றாசிரியர் கூறுகின்றார்: இருவருமே உண்மையான சாட்சிகள் ஆவர். மேலும் முஸ்லிம்களில் மிக அதிகமான நம்பிக்கைக்குரியவர்கள் ஆவர். எந்த கத்தியால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாக்கப்பட்டார்களோ அது புர்முஸான் மற்றும் ஜுஃபைனாவிடம் இருந்தது என்று அவர்கள் சாட்சியம் பகர்கின்றனர். அவர்களில் ஒரு சாட்சியம் கூறியது என்னவென்றால், கொலையாளியான அபூலூலூ கொலை செய்வதற்கு முன்பே இருவருடன் சதித்திட்டம் தீட்டிக் கொண்டிருப்பதை நான் பார்த்தேன் என்று சாட்சியம் கூறினார். இரண்டு சாட்சியங்களின் கூற்றுகளுக்கேற்ப எந்த நாள் காலையில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டிருந்ததோ அதற்கு முந்தைய இரவில் தான் இந்த சதித்திட்டம் தீட்டப்பட்டது. இதற்குப் பிறகும் அமீருல் மூமினீன் இந்த சதித்திட்டத்திற்கு இரையானார்கள் என்பதிலும், அதில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த மூன்று நபர்களும் பங்கு பெறவில்லை என்றும் சந்தேகம் கொள்ளும் நபர் யாராவது இருக்கின்றாரா? ஆயினும் ஏனைய ஈரானியர்கள் அல்லது அந்த சமுதாயங்களின் உறுப்பினர்களில் அதாவது எவர்கள் மீது முஸ்லிம்கள் வெற்றி கொண்டார்களோ அவர்களில் சிலர் இந்த சதித்திட்டத்தில் பங்கு பெற்றிருக்கக் கூடும்.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி) அவர்களின் கூற்றையும், அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் அவர்களின் ஷஹாதத்தையும் கேட்டபோது அண்ட சராசரமும் அன்னாரின் பார்வையில் ரத்தமாக தென்பட்டது. மேலும் மதீனாவிலுள்ள வெளிநாட்டினர் அனைவரும்

இந்த சதித்திட்டத்தில் பங்கு பெற்றுள்ளார்கள் என்றும் அவர்கள் அனைவரின் கைகளிலிருந்தும் அந்த குற்றத்தின் இரத்தம் சொட்டுகிறது என்ற விஷயமும் அவர்களின் உள்ளங்களில் குடி கொண்டு விட்டது. எனவே அன்னார் உடனடியாக வாளை ஏந்தினார்கள். மேலும் முதலில் புர்முஸான் மற்றும் ஜுஃபைனாவின் கதையை முடித்தார்கள்.

அறிவிப்பில் வருகின்றது: அன்னார் புர்முஸானை அழைத்தார்கள். அவன் வெளியே வந்தபோது என்னுடன் வாருங்கள். எனது குதிரையை பாருங்கள் என்று கூறி அன்னார் பின்னால் விலகிக் கொண்டார்கள். அவன் அன்னாருக்கு முன்பு கடந்து சென்றபோது அவன் மீது வாளைக் கொண்டு ஒரு முறை அன்னார் தாக்கினார்கள். அந்த ஈரானி வாளின் வெப்பத்தை உணர்ந்தபோது லாயிலாஹ இல்லல்லாஹ் என்று கூறி அங்கேயே விழுந்து விட்டான்.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகனாக இருந்தார்கள். அன்னார் கூறினார்கள்: பின்னர் நான் ஜுஃபைனாவை அழைத்தேன். அவன் ஹீராவைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவனாக இருந்தான். அவன் சஅத் பின் அபீ வக்காஸ் அவர்களின் பால்குடி சகோதரனாக இருந்தான். இந்த உறவின் அடிப்படையில் சஅத் அவர்கள் அவனை மதீனாவிற்கு அழைத்திருந்தார்கள். அவன் அங்கு மக்களுக்கு எழுதப் படிக்க கற்றுக் கொடுத்து வந்தான். நான் அவன் மீது வாளால் தாக்குதல் நடத்தியபோது அவன் தனது கண்களுக்கு முன்னால் சிலுவையின் வடிவத்தை வடித்தான். இரண்டாவது சகோதரர் ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்களும் தனது தந்தையாரின் ஷஹாதத்தின் மீது மிக அதிக கோபம் கொண்டிருந்தார்கள். எல்லோரையும் விட உம்முல் மூமினீன் ஹஸ்ரத் ஹப்ஸா (ரலி) அவர்களுக்கு அதிகமான கோபம் இருந்தது.

எவ்வாறிருப்பினும் அன்னார் செய்த அந்த செயலுக்கு சட்ட ரீதியாக எந்த அனுமதியும் இருக்கவில்லை. எந்தவொரு நபரும் சுயமே பழிவாங்கி விடுவதற்கு எழுந்து நிற்கவோ, மேலும் தமது உரிமையை சுயமே பெற்றுக் கொள்வதற்கோ எவருக்கும் அதிகாரம் வழங்கப்படவில்லை. ஏனென்றால் விவகாரங்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே தீர்ப்பு வழங்கி வந்தார்கள். மேலும் அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு குலஃபா ரிழ்வானுல்லாஹி அலைஹிம் அவர்களுக்கு மட்டுமே அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் மக்களுக்கு மத்தியில் நீதியான தீர்ப்புகளை வழங்கியும், குற்றவாளிக்கு எதிராக பழிவாங்குவதற்கான கட்டளையையும் வழங்கி வந்தார்கள். எனவே அன்னாருக்கு இந்த சதித்திட்டத்தை பற்றி தெரிய வந்தபோது அதாவது எந்த சதித்திட்டத்தின் விளைவால் தனது தந்தையின் உயிர் பறிக்கப்பட்டது என்பது தெரிய வந்ததோ அதற்குரிய தீர்ப்பை அமீருல் மூமினீன் அவர்கள் மூலமாக பெற்றுக் கொள்வது ஹஸ்ரத் உபைதுல்லாஹ் அவர்களின் கடமையாக இருந்தது. கலீஃபாவிற்கு அது ஒரு சதித்திட்டம் என்பது நிரூபணமாகி இருந்தால் பின்னர் அவர்கள் பழிவாங்குதலுக்கான கட்டளையை பிறப்பித்திருப்பார்கள். அல்லது ஒருவேளை அது நிரூபணமாகவில்லையென்றால் அமீருல் மூமினீன், புதிய கலீஃபாவின் உள்ளத்தில் சந்தேகம் ஏதும் இருந்திருந்தால் அன்னார் அந்த சந்தேகத்தின் அளவின் அடிப்படையில் தண்டனையில் குறைப்பு ஏதும் செய்திருப்பார்கள். அல்லது அபூலூலூ மட்டுமே குற்றவாளி என்ற தீர்ப்பை வழங்கி இருப்பார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 869– 872 – லாஹூரிலுள்ள உருது பஸார் இஸ்லாமி அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

சுருக்கமாக இந்தக் கொலை முறையாக தீட்டப்பட்ட ஒரு சதித்திட்டமாக இருந்தது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அந்த காலத்தின் நிலைமைகளின் அடிப்படையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களால் உடனடியாக அதை விசாரிக்க முடியாமல் இருந்திருக்க கூடும் அல்லது என்ன நிலைமை இருந்ததோ அது குறித்து ஆரம்பகால வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கின்றார்கள். இந்தக் காலத்தில் சில வரலாற்று ஆசிரியர்கள் சில காரணிகளின் ஒளியில் இது குறித்து விவாதிக்கின்றனர். மேலும் அவர்களின் சான்றுகளில் சிலவற்றில் வலு இருப்பதாகவே தெரிய வருகின்றது. ஏனென்றால் அந்த சதிகாரகும்பல் அத்துடன் நின்று விடவில்லை. மாறாக, பின்னர் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் இதேபோன்று ஒரு சதித்திட்டத்திற்கு இலக்காகின்றார்கள். இதன் மூலம் இந்த சந்தேகம் மேலும் வலுப் பெறுகின்றது. அதாவது அதிகரித்து வந்த இஸ்லாத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றியை தடுப்பதற்காகவும் தமது பழிவாங்கும் நெருப்பை தணித்துக் கொள்வதற்கும் வெளிப்புற சக்திகள் ஒரு சதித்திட்டத்தின் கீழ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டது. வல்லாஹு அஃலம்.

சஹீஹ் முஸ்லிமில் இவ்வாறு அறிவிப்பு கிடைக்கிறது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: எனது தந்தையார் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டபோது நான் அவர்களுக்கு மத்தியில் இருந்தேன். மக்கள் அன்னாரை புகழ்ந்துரைத்தனர். جَزَاكَ اللّٰهُ خَيْرًا அல்லாஹ் தங்களுக்கு சிறந்த நற்கூலியை வழங்குவானாக என்று கூறினர். அதற்கு அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் ஆர்வம் கொண்டவனாகவும் இருக்கின்றேன். மேலும் அச்சம் கொள்ளக் கூடியவனாகவும் இருக்கின்றேன்.

தாங்கள் ஒருவரை கலீஃபாவாக நியமித்து விடுங்கள் என்று மக்கள் கூறினர். அதற்கு உங்களின் சுமையை நான் இந்த வாழ்க்கையிலும், மரணித்த பிறகும் சுமந்து கொள்ள வேண்டுமா? என்று அன்னார் கேட்டார்கள். இதில் எனது பங்கு சரிசமமாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். அதாவது நான் எந்த வகையிலும் பிடிக்கப்படக்கூடாது. எனக்கு எதுவும் கிடைத்து விடக்கூடாது என்பதாகும். ஒருவேளை நான் ஒருவரை பிரதிநிதியாக ஆக்கி விட்டால் அன்னாரும் (ஒருவரை) பிரதிநிதியாக ஆக்கினார்கள். அவர் எம்மை விட சிறந்தவராக இருந்தார். அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள். நான் அவ்வாறு ஆக்கி விட்டால் எந்த தவறும் இல்லை. ஒருவேளை நான் எந்தப் பிரதிநிதியையும் நியமிக்காமல் உங்களை விட்டுச் சென்று விட்டால் என்னை விடச் சிறந்தவரும் எந்தப் பிரதிநிதியையும் நியமித்து விட்டுச் செல்லவில்லை. அதாவது இரண்டாவது உதாரணமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உதாரணத்தை வழங்கினார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பிரதிநிதியை நியமிக்கவில்லை.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அமாரத், பாப் இஸ்திஹ்லாஃப வ தர்கா, ஹதீஸ் எண் 4713)

சஹீஹ் முஸ்லிமின் ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களிடம் சென்றேன். உங்களது தந்தையார் பிரதிநிதியை நியமிக்கக் கூடியவர் இல்லை என்பதை நீங்கள் அறிவீர்களா? என்று அன்னார் கேட்டார்கள். அதற்கு அன்னார் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று நான் கூறினேன். அதாவது ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்கள் அன்னார் அவ்வாறு செய்ய மாட்டார்கள் என்று கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் நான் மீண்டும் பேசுவேன் என்று தான் சத்தியம் செய்திருப்பதாக அன்னார் கூறினார்கள். நான் காலை வரை மௌனமாக இருந்தேன். அன்னாரிடம் எதுவும் பேசவில்லை. நான் எனது சத்தியத்தின் காரணமாக மலையை சுமப்பவனாக இருந்ததைப் போன்று எனது நிலை இருந்தது என்று அன்னார் கூறுகின்றார்கள்.

நான் திரும்பிச் சென்று அன்னாரிடம் சென்றேன். மக்களின் நிலையை அன்னார் என்னிடம் கேட்டறிந்தார்கள். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கேட்டார்கள். பின்னர் நான் மக்கள் கூறுகின்ற விஷயங்களை அன்னாரிடம் கூறினேன். நான் மக்கள் இவ்வாறு பேசுவதாக செவியுற்றேன் என்று அன்னாரிடம் கூறினேன். தங்களிடம் அந்த விஷயத்தை நிச்சயம் பேசுவேன் என்று நான் தங்களிடம் சத்தியம் செய்துள்ளேன். தாங்கள் பிரதிநிதியை நியமிக்க மாட்டீர்கள் என்பது மக்களின் எண்ணமாக உள்ளது. ஒருவர் உங்களுடைய ஒட்டகங்களை மேய்ப்பவராகவோ அல்லது ஆடுகளை மேய்ப்பவராக இருந்து அவர் உங்களிடம் வந்தால் மேலும் அவற்றை விட்டு விட்டால் அவர் அவற்றை வீணடித்து விடுவதை நீங்கள் கண்டு கொள்வீர்கள். எனவே மக்களின் கண்காணிப்பு மிகவும் அவசியமாகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எனது பேச்சை ஒப்புக் கொண்டார்கள். மேலும் சிறிது நேரம் வரை தமது தலையை தாழ்த்தி இருந்தார்கள். பின்னர் அன்னார் (ரலி) அவர்கள் தலையை உயர்த்தினார்கள். மேலும் என் பக்கம் கவனம் செலுத்தினார்கள். அல்லாஹ் தனது மார்க்கத்தை பாதுகாப்பான் என்று கூறினார்கள். நான் ஒருவரை கலீஃபாவாக ஆக்காவிட்டால் என்ன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கூட யாரையும் கலீஃபாவாக நியமிக்கவில்லை. நான் கலீஃபாவாக நியமித்தால் பின்னர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் கலீஃபாவை நியமித்துள்ளார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மகனாகிய இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் மீது

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஆணையாக! அன்னார் அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை குறிப்பிட்டபோது அன்னார் (ரலி) அவர்கள் எவரையும் பிரதிநிதியாக நியமிக்க மாட்டார்கள் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் அமாரத், பாப் இஸ்திஹ்லாஃப வ தர்கா, ஹதீஸ் எண் 4714)

ஹஸ்ரத் மிஸ்வர் பின் மஹ்ரமா அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு காயம் ஏற்படுத்தப்பட்டபோது அன்னார் வேதனையால் நிம்மதியிழந்திருந்தார்கள். ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் அன்னாருக்கு ஆறுதல் வழங்கத் தொடங்கினார்கள். அன்னார் கூறினார்கள்: அமீருல் மூமினீன் அவர்களே! அவ்வாறென்றால் தாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் இருந்துள்ளீர்கள். தாங்கள் மிகவும் அழகிய முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கியுள்ளீர்கள். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் மீது மகிழ்ச்சியடைந்த நிலையில் தாங்கள் அன்னாரை விட்டு பிரிந்துள்ளீர்கள். தாங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் இருந்துள்ளீர்கள். மேலும் அழகிய முறையில் அன்னாருக்கு ஒத்துழைப்பு நல்கினீர்கள். மேலும் தங்கள் மீது அன்னார் மகிழ்ச்சியடைந்த நிலையில் தாங்கள் அன்னாரை விட்டு பிரிந்துள்ளீர்கள். பின்னர் தாங்கள் அன்னாரின் தோழர்களுடன் இருந்தீர்கள். மேலும் தாங்கள் மிகவும் அழகிய முறையில் அவர்களுக்கு ஒத்துழைப்பு நல்கினீர்கள். தாங்கள் அவர்களை விட்டு பிரிந்தாலும் நிச்சயமாக அவர்கள் தங்கள் மீது மகிழ்ச்சியாக இருக்கும் நிலையில் தான் அன்னாரை விட்டு பிரிவீர்கள்.

அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: தற்போது தாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமை மற்றும் அன்னாரின் திருப்தியைக் குறித்து குறிப்பிட்டுள்ளீர்கள். இது அல்லாஹ் என் மீது செய்த கருணை மட்டுமே ஆகும். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தோழமை மற்றும் அன்னாரின் திருப்தியைக் குறித்து நீங்கள் குறிப்பிட்டுள்ளீர்கள். இதுவும் அல்லாஹ் என் மீது செய்த கருணை மட்டுமே ஆகும். நீங்கள் என்னிடம் எனது கவலையை பார்க்கின்றீர்கள் என்றால் அது உங்களைக் குறித்தும், உங்களது தோழர்களைக் குறித்தும் ஆகும். நான் என்னைப் பற்றி கவலைப்படவில்லை. உங்களைப் பற்றியும், உங்களது தோழர்களைப் பற்றியும் கவலைப்படுகின்றேன். அல்லாஹ்வின் மீது ஆணையாக! என்னிடம் பூமி முழுவதும் தங்கமாக இருந்திருந்தால் நிச்சயமாக பின்னர் நான் கம்பீரமிக்க அல்லாஹ்வின் தண்டனையிலிருந்து தப்பிப்பதற்கு அதனை ஈட்டுத் தொகையாக கொடுத்து நான் அந்த தண்டனையை பார்ப்பதற்கு முன்னர் தப்பித்திருப்பேன்.

(சஹீஹ் புகாரி, கிதாப் ஃபஸாயிலுந் நபி (ஸல்), பாப் மனாகிப் உமர் பின் கத்தாப், ஹதீஸ் எண் 3692)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் وَلَيُبَدِّلَنَّهُم مِّن بَعْدِ خَوْفِهِمْ என்ற வசனத்திற்கு விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்: கலீஃபாக்கள் அச்சப்பட்டு விடுகின்ற அளவிற்கு அவர்களுக்கு எந்த துன்பமும் வரவில்லை. ஒருவேளை வந்தாலும் கூட அல்லாஹ் அதனை அமைதியால் மாற்றி விடுகின்றான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. ஆனால் சம்பவங்களைக் பார்க்கும்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு அந்த ஷஹாதத்தைக் கண்டு எந்த அச்சமும் இருந்திருக்கவில்லை என்பது தெரிய வருகின்றது.

மாறாக, அல்லாஹ்வே! எனக்கு ஷஹாதத்தை வழங்குவாயாக. மேலும் எனக்கு மதீனாவிலேயே ஷஹாதத் வழங்குவாயாக என்று அன்னார் தொடர்ந்து துஆக்கள் செய்து வந்தார்கள். எனவே அல்லாஹ்வே எனக்கு மதீனாவில் ஷஹாதத் வழங்குவாயாக என்று எந்த நபர் முழு வாழ்க்கையையும் துஆவில் கழித்து வந்தாரோ அவர் ஷஹீதாகி விட்டால் அவரிடம் ஓர் அச்சத்திற்கான நிலை வந்தது. ஆனால் இறைவன் புறமிருந்து அந்த அச்சம் அமைதியில் மாற்றப்படவில்லை என்று நாம் எவ்வாறு கூற முடியும்? நிச்சயமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஷஹாதத்திற்கு அஞ்சியிருந்தால் பின்னர் அவர்கள் ஷஹீதாகி இருந்தால் அன்னாரின் அச்சத்தை இறைவன் அமைதியில் மாற்றவில்லை என்று கூறியிருக்க முடியும். ஆனால் அல்லாஹ்வே! நீ எனக்கு மதீனாவில் ஷஹாதத் வழங்குவாயாக என்று அன்னார் துஆக்கள் செய்து வந்தார்கள். எனவே அன்னார் ஷஹாதத்திற்கு அஞ்சினார்கள் என்று எவ்வாறு நிரூபணமாகின்றது? அன்னார் ஷஹாதத்திற்கு அஞ்சியிருக்கவில்லை. மாறாக, அதற்காக துஆக்கள் செய்து வந்தார்கள். அதனை இறைவன் ஒப்புக் கொண்டு விட்டான் என்றால் இந்த வசனத்தின் கீழ் அன்னாருக்கு எந்த அச்சமும் அதாவது அன்னாரது உள்ளம் உணரும் வகையில் எந்த அச்சமும் இருக்கவில்லை என்று தெரிய வருகின்றது.

நான் முன்னரே கூறியதுபோன்று இந்த வசனத்தில் இந்த கருத்து கூறப்பட்டுள்ளது. அதாவது கலீஃபாக்கள் எந்த விஷயத்திற்கு அஞ்சிக் கொண்டிருப்பார்களோ அது ஒருபோதும் நடைபெற முடியாது. மேலும் அல்லாஹ் அவர்களின் அச்சத்தை அமைதியில் மாற்றுவான் என்பது அல்லாஹ் அவர்களிடம் செய்த வாக்குறுதியாகும். ஆனால் அவர்கள் ஒரு விஷயத்தை பற்றி அச்சமே கொள்ளாதபோதும் மாறாக, தனது கண்ணியம் மற்றும் உயர் அந்தஸ்திற்கு காரணியாக ஒன்றை கருதும்போதும் அந்த விஷயத்தை அச்சம் என்று கூறுவதும், மேலும் அது அமைதியில் ஏன் மாற்றப்படவில்லை என்று கேட்பதும் பொருளற்ற விஷயமாகும். இந்த கருத்தும் புரியத்தக்கதாகும்.

அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இந்த துஆவை படித்தபோது எனது உள்ளத்தில் நான் இவ்வாறு கூறினேன். அதாவது இந்த துஆவின் வெளிப்படையான பொருள் என்னவென்றால், எதிரி மதீனாவின் மீது தாக்குதல் நடத்த வேண்டும். மேலும் அனைத்து முஸ்லிம்களும் அழிந்து விடும் வகையில் கடுமையான

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும்
என்னை வணங்குவதற்காகவே
படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)

தாக்குதலாக அது அமைய வேண்டும். பின்னர் அந்த எதிரி காலத்தின் கலீஃபா வரை வந்தடைந்து அவரை ஷஹீதாக்க வேண்டும். இதுவே அந்த துஆவின் வெளிப்படையான பொருளாக இருந்தது. ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் துஆவை ஒப்புக் கொண்டு விட்டான். மேலும் அதன் மூலம் இஸ்லாத்தின் கண்ணியம் நிலைபெறும் வகையிலான ஏற்பாடுகளையும் செய்து விட்டான். மதீனாவின் மீது வெளியிலிருந்து ஒருவன் போர் தொடுப்பதற்கு பகரமாக மதீனாவிற்குள்ளிருந்தே ஒரு தீயவன் தோன்றினான். அவன் கத்தியால் குத்தி அன்னார் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டான்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 6 பக்கம் 378)

அடிமைகளை விடுதலை செய்வது தொடர்பாக இஸ்லாத்தின் போதனையை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தை கொண்டு இவ்வாறு எழுதியுள்ளார்கள். மேலும் அதற்கான காரணிகளை எடுத்துரைத்துள்ளார்கள்.

அன்னார் கூறினார்கள்: நீங்கள் எந்தவித இழப்பீட்டு தொகையும் பெறாமல் கருணை செய்து அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று முதலில் கட்டளை வழங்கப்பட்டது. அதாவது அடிமைகளை எந்த இழப்பீட்டு தொகையுமின்றி விடுதலை செய்யும்படி கூறப்பட்டது. பின்னர் அவ்வாறு செய்ய முடியவில்லையென்றால் இழப்பீட்டு தொகையை பெற்றுக் கொண்டு அடிமையை விடுதலை செய்யுங்கள். யாராவது ஒருவர் பின்தங்கி விட்டால், இழப்பீட்டு தொகையை கொடுக்க முடியாத ஓர் அடிமை இருந்தால் மேலும் அவரைப் பற்றி அரசாங்கமும் அந்த விவகாரத்தில் ஆர்வம் கொள்ளாமல் இருந்தால் மேலும் எங்கிருந்து அவர் வந்தாரோ எந்த அரசாங்கத்தின் உறுப்பினராக அவர் இருந்தாரோ அவரை விடுதலை செய்வதில் அரசாங்கம் ஆர்வம் காட்டவில்லையென்றால் அவரது உறவினர்களும் கவனமற்றவர்களாக இருக்கின்றார்கள் என்றால் பின்னர் அவர்கள் உங்களுக்கு நோட்டீஸ் கொடுத்து விட்டு தனது இழப்பீட்டு தொகையை பல்வேறு தவணைகளில் வழங்க முடியும். அதாவது அந்த கைதி சுயமே தனது இழப்பீட்டு தொகைக்கான தவணையை முன் வைக்க முடியும். அதுபோன்ற நிலையில் வருமானத்தை பொறுத்தவரை தவணையை தவிர்த்து மற்ற அனைத்தும் அவருடையதாக இருக்கும். அந்த அடிமை செயல் ரீதியாக முழுமையாக சுதந்திரமானவராக இருப்பார். அதாவது அவர் எவ்வளவு சம்பாதிப்பாரோ அதிலிருந்து தவணையை வழங்கி விட வேண்டும். அவரின் விடுதலைக்காக அவர் நியமித்த தொகையை கொடுத்து விட வேண்டும். எஞ்சியுள்ள தொகை அனைத்தும் அவருடையதாகும். இது ஒரு வகையான சுதந்திரமாகும்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே
துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Qaid, Melapalayam)

உடன்படிக்கையின் கீழ் இருந்த ஓர் அடிமையே கொலை செய்தான். அவன் அதாவது அந்த அடிமை எந்த முஸ்லிமிடம் வசித்து வந்தாரோ அவரிடம் ஒரு நாள், எனது தகுதி இவ்வளவு தான் உள்ளது. எனக்கு நீங்கள் வரியை நியமனம் செய்யுங்கள். மாதம், மாதம் தவணைகளில் அதனை நான் வழங்கி விடுவேன். மேலும் கொஞ்சம் கொஞ்சமாக முழு இழப்பீட்டு தொகையையும் செலுத்தி விடுவேன் என்று கூறினான்.

அன்னார் ஒரு சாதாரண தவணையை நியமனம் செய்து விட்டார்கள். மேலும் அதனை அவன் செலுத்தி வந்தான்.

ஒரு முறை எனது எஜமானர் என் மீது பெரும் தவணை தொகையை நிர்ணயித்து விட்டார். தாங்கள் அதனை குறைத்துக் கொடுங்கள் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் அவன் முறையிட்டான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனின் வருமானத்தை ஆய்வு செய்தபோது எந்த வருமானத்தின் கணக்கீட்டின் அடிப்படையில் தவணை தொகை நிர்ணயிக்கப்பட்டிருந்ததோ அது பல மடங்கு அதிகமான வருமானத்தை உள்ளடக்கியதாக இருந்தது. இந்த அளவிற்கு வருமானத்திற்கு எதிரில் உனது தவணைத் தொகை மிகக் குறைவாகவே உள்ளது. அதை என்னால் குறைக்க முடியாது என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அதைப் பார்த்து கூறி விட்டார்கள். இந்த தீர்ப்பினால் அவனுக்கு கடும் கோபம் ஏற்பட்டது. நான் ஈரானியனாக இருக்கின்றேன். எனவே தான் எனக்கெதிராக இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் எனது எஜமானர் அரேபியராக இருப்பதன் காரணமாக அவர் கருத்தில் கொள்ளப்பட்டார் என்று அவன் எண்ணினான். எனவே இந்த கோபத்தின் நிலையில் அவன் இரண்டாவது நாளிலேயே அன்னார் மீது கத்தியால் குத்தி தாக்குதல் நடத்தினான். மேலும் அன்னார் (ரலி) அவர்கள் அதே காயங்களின் விளைவால் ஷஹீதாகி விட்டார்கள்.

(இஸ்லாம் கா இக்திஸாதி நிஸாம், அன்வாருல் உலூம் தொகுதி 18 பக்கம் 28,29)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மேலும் கூறுகின்றார்கள்: உலகில் இரண்டே விஷயங்கள் தான் (மனிதனை) நேர்மையிலிருந்து விலக்குவதற்கு காரணியாக அமைகின்றன. ஒன்று, அதீத பகைமை அல்லது அதீத நேசம். கடுமையான பகைமை சில முறை சாதாரண சம்பவத்தால் உருவாகி விடுகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தை பாருங்கள். எவ்வளவு சாதாரண சம்பவம் பகைமையை அதிகரித்து விட்டது. அது இஸ்லாமிய உலகத்திற்கு எவ்வளவு பெரிய பாதிப்பை ஏற்படுத்தி விட்டது. இந்த சம்பவத்தின் தாக்கம் தற்போது வரை நீடித்து வருகின்றது என்று நான் கருதுகின்றேன்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் ஒரு வழக்கு அன்னாரிடம் வந்தது. ஒரு நபரின் அடிமை அதிகமாக சம்பாதித்திருந்தார். ஆனால் முதலாளிக்கு மிகக் குறைவாகவே கொடுத்து வந்தார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அந்த அடிமையை அழைத்தார்கள். எஜமானரின் தொகையை அதிகரித்து கொடுங்கள் என்று அவனிடம் கூறினார்கள். அக்காலத்தில் தொழில் நுபுணர்கள் குறைவாகவே இருந்தனர். எனவே கொல்லர்கள் மற்றும் தச்சர்களுக்கு மிகவும் முக்கியத்துவம் இருந்தது. அந்த அடிமை கோதுமை அரைக்கின்ற அரவை கருவியை தயாரித்து வந்தான். இவ்வாறு அதிகமாக சம்பாதித்திருந்தான். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனுக்கு மூன்றரை அனா பைசாவை தனது முதலாளிக்கு கொடுக்கும்படி அவன் மீது பொறுப்பு சுமத்தினார்கள். இது எவ்வளவு குறைவான தொகையாகும். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தவறான தீர்ப்பு வழங்கினார்கள் என்பது அவனது எண்ணமாக இருந்தது. அதனால் அவனது உள்ளத்தில் பகைமை அதிகரிக்கத் தொடங்கி விட்டது.

ஒரு முறை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எமக்கும் ஒரு அரவை உரலை தயாரித்து கொடுங்கள் என்று அவனிடம் கூறினார்கள். அப்போது நன்றாக இயங்கக்கூடிய ஒரு அரவை உரலை நான் தயாரிப்பேன் என்று அவன் திமிராக பதிலளித்தான். இதைக்கேட்ட ஒருவர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், அவன் உங்களை மிரட்டுகின்றான் என்று கூறினார். இது முதலாவது சம்பவமாகும். இதிலிருந்து தெரிய வருவது என்னவென்றால், இத்துடன் ஒப்புமை கொண்ட அல்லது அதே சம்பவம் நிகழ்ந்துள்ளது. எவ்வாறிருப்பினும் சம்பவம் அதே அடிமையைப் பற்றியது தான். சொற்களிலிருந்து இந்த விஷயம் வெளிப்படவில்லை என்று அன்னார் கூறினார்கள்.

முதல் அறிவிப்பில் அவர் மிரட்டல் விடுத்துக் கொண்டிருக்கின்றார் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சுயமே கூறினார்கள். இந்த அறிவிப்பில் அந்த தொனி மிரட்டும் தொனியாக அமைந்துள்ளது என்று இவர் கூறினார். இறுதியில் ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். அந்த அடிமை அன்னாரை கத்தியால் குத்தி கொன்று விட்டான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகின்றார்கள்: எந்த உமர் கோடிக்கணக்கான முஸ்லிம்களின் அரசராக இருந்தாரோ மேலும் எந்த உமர் ஒரு பரந்த பேரரசாங்கத்தின் ஆட்சியாளராக இருந்தாரோ மேலும் எந்த உமர் முஸ்லிம்களின் சிறந்த தலைவராக இருந்தாரோ அவர் மூன்றரை அனாவிற்கு பகரமாக கொல்லப்பட்டு விட்டார். ஆனால் (அசல்) விஷயம் என்னவென்றால், எவருடைய இயல்பில் பகைமையும், காழ்ப்புணர்ச்சியும் இருக்குமோ பின்னர் அவர் மூன்றரை அனா அல்லது இரண்டு அனா பைசா என்றெல்லாம் பார்ப்பதில்லை. அவன் தனது தாகத்தை தணித்துக் கொள்ளவே பார்க்கின்றான். அவனது இயல்பில் காழ்ப்புணர்ச்சி நிறைந்து இருக்கின்றது. தமக்கும் மற்றவர்களுக்கும் என்ன முடிவு ஏற்படும்? என்ற நிலையை அவர்கள் பார்ப்பதில்லை. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியிடம், நீ இந்த தீய செயலை ஏன் செய்தாய்? என்று கேட்கப்பட்டபோது அன்னார் எனக்கு எதிராக தீர்ப்பு வழங்கினார்கள். அதற்கு நான் பழிவாங்கி விட்டேன் என்று அவன் கூறினான்.

முதலில் இந்த விளக்கம் இவ்வாறு எடுத்துரைக்கப்படவில்லை. அந்த நேரத்தில் அவன் பிடிக்கப்பட்டபோது குறைந்த நேரமே கிடைத்திருக்கக் கூடும். எனவே அதில் நான் இந்த கொலையை இதற்காக செய்தேன் என்று அவன் கூறியிருக்கலாம். மேலும் பின்னர் அவன் தற்கொலையும் செய்து கொண்டான்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: நான் இந்த வேதனைமிக்க சம்பவத்தை குறிப்பிட்டவாறு இன்று வரை இஸ்லாத்தின் மீது அதன் தாக்கம் உள்ளது என்று கூறியிருந்தேன். அது எவ்வாறென்றால், ஒரு வகையில் மரணம் எப்போதும் தொடர்ந்து வருகின்றது. ஆயினும் ஆற்றல்கள் வலிமையாக இருக்கின்றபோது மரணத்தைப் பற்றி எண்ணுவது கிடையாது. ஆனால் ஆற்றல் பலவீனமாக இருக்கும்போதும், உடல் ஆரோக்கியம் வீழ்ச்சியை நோக்கி செல்லும்போதும், மக்களின் எண்ணம் சுயமே எதிர்கால அமைப்பை குறித்து சிந்திக்கத் தொடங்கி விடும். அவர்கள் ஒருவர் மற்றவருடன் இது குறித்து பேசுவதில்லை. மாறாக, அவர்கள் சுயமே இதுபோன்ற நடைமுறைகளை உருவாக்குகின்றனர். அவை எதிர்கால ஏற்பாடு தொடர்பாக சிந்திக்கத் தூண்டுகின்றது. எனவே தான் காலத்தின் இமாம் மரணமடைகின்றபோது மக்கள் விழிப்படைந்து விடுகின்றார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வயது 63 ஆக இருந்தது. ஆயினும் அன்னாரின் ஆற்றல் வலிமையாக இருந்தது. அன்னாரின் எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் விரைவாக பிரிந்து சென்று விடுவார்கள் என்ற எண்ணம் எந்த சஹாபியின் மூளையிலும் தோன்றாமல் இருந்தது. இதன் காரணமாக அவர்கள் எதிர்கால ஏற்பாடுகளைக் குறித்து முற்றிலும் அறியாதவர்களாக இருந்தனர். திடீரென ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம் என்ற துன்பம் வந்தது. அந்த நேரத்தில் ஜமாஅத் வேறொரு இமாமை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தம் இல்லாமல் இருந்தது. இந்த ஏற்பாடுகள் இல்லாததன் விளைவாக அவர்களுக்கு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் ஏற்பட்டிருக்க வேண்டிய அளவிற்கு தொடர்பு ஏற்படவில்லை. இதன் காரணமாக இஸ்லாத்தின் நிலை மிகவும் மோசமானது. மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களின் காலத்தில் இன்னும் மோசமாக ஆகி விட்டது.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 11 பக்கம் 241)

பிற்காலத்தில் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் இதுவும் ஒரு காரணமாக கூறப்பட்டுள்ளது. அன்னார் (ரலி) அவர்களின் பார்வையில் இந்த காரணமும் இருந்திருக்கக் கூடும்.

குழப்பத்தின் நேரத்தில் சில நபர்கள் தொழுகையின் சந்தர்ப்பத்தில் பாதுகாப்பிற்காக நிற்பது அவசியமாகும். இதனையும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் சம்பவத்தை எடுத்துரைத்த இடத்தில் அன்னார் இதனையும் கூறுகின்றார்கள். அதாவது திருக்குர்ஆனின் தெளிவான கட்டளை உள்ளது. பாதுகாப்பிற்காக முஸ்லிம்களில் பாதி பேர் நிற்க வேண்டும். இது போர் நேரத்தில் தொடர்புடைய விஷயமாகும். ஒரு ஜமாஅத்திற்கு

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

பாதுகாப்பிற்கான அவசியம் இருக்கும்போது இவ்வாறு செய்ய வேண்டும். ஆனால் சிறிய குழப்பங்களின்போது அதை அகற்றுவதற்காக சில நபர்கள் தொழுகை நேரத்தில் நிற்க வைக்கப்பட்டால் அது ஆட்சேபனைக்குரியதல்ல என்பதும் இதிலிருந்து தெரிய வருகின்றது. மாறாக, அது அவசியமாகும். இதை எவ்வாறு செய்ய வேண்டும்?

அன்னார் கூறுகின்றார்கள்: போரின் நேரத்தில் ஆயிரம் நபர்களில் ஐநூறு நபர்களை பாதுகாப்பிற்காக நிறுத்த முடியுமென்றால் சாதாரண அபாய நேரத்தில் ஆயிரத்தில் 5, 10 நபர்களை பாதுகாப்பிற்காக ஏன் நிறுத்தக் கூடாது? அபாயம் உறுதியற்றதாகும் என்று கூறுவது அறிவீனமான கூற்றாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுடன் என்ன நடந்தது? அன்னார் (ரலி) அவர்கள் தொழுது கொண்டிருந்தார்கள். முஸ்லிம்களும் தொழுகையில் மும்முரமாக இருந்தார்கள். அந்நிலையில் ஒரு தீயவன் இந்த நேரம் தாக்குதலுக்கு பொருத்தமான நேரம் என்பதை புரிந்து கொண்டான். அவன் முன்னேறிச் சென்றான். மேலும் அவன் கத்தியால் குத்தி விட்டான். இந்த சம்பவத்திற்குப் பிறகும் தொழுகையின் நேரத்தில் பாதுகாப்பு கொடுப்பது இந்த நியதி அல்லது கண்ணியத்திற்கு எதிரானதாகும் என்று ஒருவர் கூறுகின்றார் என்றால் அது அவரது முட்டாள்தனத்தின் வெளிப்பாடே அன்றி வேறொன்றுமல்ல. இங்கு நியதி அல்லது கண்ணியம் என்பது தொழுகையின் விதி அல்லது கண்ணியத்திற்கு எதிரானதாகும் என்று பொருள். அந்த நபரின் உதாரணம் அந்த முட்டாளின் உதாரணத்தைப் போன்றதாகும். அதாவது ஒருவர் போரில் பங்கு பெற்றுள்ளார். ஓர் அம்பு அவரை தாக்கியுள்ளது. அதனால் இரத்தம் வழிந்து கொண்டிருக்கின்றது. அவர் மைதனாத்திலிருந்து ஓடி விட்டார். மேலும் இரத்தத்தை துடைத்துக் கொண்டு, அல்லாஹ்வே! இது கனவாகவே இருக்கட்டும் என்று கூறிக் கொண்டே செல்கின்றார். அம்பு என்னை தாக்கியது உண்மையாக இருக்க வேண்டாம் என்று கூறிக் கொண்டு செல்கின்ற நபரைப் போன்றவர் அவர் ஆவார்.

ஒரு சந்தர்ப்பத்தில் சஹாபிகள் தமது பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை சுயமே செய்யவில்லை. அதனால் அவர்களுக்கு கடுமையான துன்பத்தை சந்திக்க நேரிட்டது. அதாவது ஹஸ்ரத் அம்ர் பின் அல் ஆஸ் (ரலி) அவர்கள் எகிப்தை வெற்றி கொள்வதற்காக சென்றார்கள். அப்போது அன்னார் அந்தப் பகுதியை வெற்றி கொண்டு விட்டார்கள். ஆனால் அதன் பிறகு அன்னார் தொழுகை நடத்தும்போது பாதுகாப்பிற்கான ஏற்பாட்டை செய்திருக்கவில்லை. முஸ்லிம்கள் இந்த நிலையில் முற்றிலும் கவனமற்றவர்களாக உள்ளார்கள் என்பதை எதிரி கண்டு கொண்டான். எனவே எதிரி ஒரு நாளை நிர்ணயித்து சில ஆயுதம் ஏந்திய நபர்களை அந்த நேரத்தில் (தொழுகை நேரத்தில்) அனுப்பி விட்டான். முஸ்லிம்கள் சஜ்தாவிற்கு சென்றடைந்த உடனேயே எதிரிகள் வாள்களால் முஸ்லிம்களின் தலைகளை வெட்ட தொடங்கி விட்டனர். நூற்றுக்கணக்கான சஹாபிகள் அந்த நாளில் கொல்லப்பட்டார்கள் அல்லது காயமுற்றார்கள் என்பது வரலாற்றிலிருந்து நிரூபணமாகின்றது.

ஒருவருக்குப் பிறகு மற்றவரின் தலை நிலத்தில் விழுந்து கொண்டே சென்றது. இரண்டாம் நபருக்குப் பிறகு மூன்றாவது நபரின் தலை விழுந்தது. என்ன நடக்கின்றது? என்பதை உடன் இருந்தவர்களால் புரிந்து கொள்ள முடியாமல் போனது. எந்த அளவுக்கென்றால் படைக்கு கடுமையான பாதிப்பு ஏற்பட்டு விட்டது.

இவ்விஷயம் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு தெரிய வந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் அவரை கடுமையாக கண்டித்தார்கள். மேலும் பாதுகாப்பிற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்பது உமக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு மதீனாவிலும் அதேபோன்று அன்னாருடன் நடக்க இருக்கின்றது என்று என்ன தெரியும்? இந்த சம்பவத்திற்குப் பிறகு எப்போதெல்லாம் தொழுவார்களோ அப்போதெல்லாம் பாதுகாப்பிற்காக பாதுகாவலர்களை சஹாபிகள் நியமித்து அதற்கான ஏற்பாட்டைச் செய்து வந்தார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 16 பக்கம் 58,69)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடனைப் பற்றி முன்னரும் கூறப்பட்டு விட்டது. அன்னார் தனது மகனிடம் கேட்டார்கள். மேலும் தனது மகனிடம் கூறியும் இருந்தார்கள். இது தொடர்பாக மேலும் வருகின்ற விஷயங்கள் என்னவென்றால், அப்துல்லாஹ் பின் உமரே! என் மீது எவ்வளவு கடன் உள்ளது? என்று பாரும் என தனது மகனிடம் அன்னார் கூறினார்கள். அவர் கணக்கிட்டபோது 86000 திர்ஹம் கடன் இருப்பதாக தெரிய வந்தது. அப்போது அப்துல்லாஹ்வே! உமரின் குடும்பத்தினரின் செல்வம் இதற்கு போதுமானதென்றால் அவர்களின் செல்வத்திலிருந்து எனது இந்த கடனை அடைத்து விடும். அவர்களின் செல்வம் போதுமானதில்லையென்றால் பின்னர் பனூ அதீ பின் கஅப் அவர்களிடம் கேட்கவும். அதுவும் போதுமானதாக இல்லையென்றால் குரைஷிகளிடம் கேட்கவும். அவர்களை தவிர்த்து வேறு எவர்களிடமும் கேட்க வேண்டாம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 257 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மிக எளிமையான வாழ்க்கையை கழிக்கக் கூடிய நமது இமாம் இவ்வளவு பெரிய தொகையை தமக்காக செலவழிக்கக் கூடியவராக இருக்கவில்லை என்பதை சஹாபா பெருமக்கள் அறிந்திருந்தனர். ஏழைகள், தேவையுடையவர்களுக்காக அன்னார் செலவழித்த தொகை தான் அன்னார் மீது இவ்வளவு கடனாக அமைந்துள்ளது என்பதை அவர்கள் அறிந்திருந்தனர். எனவே அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் தாங்கள் பைத்துல் மாலிலிருந்து கடனாக பெற்று ஏன் இந்த கடனை அடைப்பதில்லை? என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் பாதுகாப்பானாக. நீங்களும், உங்களது தோழர்களும் எனக்குப் பிறகு நாங்கள் எங்களது அனைத்து தொகையையும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்காக விட்டு விட்டோம் என்று கூறுவதை நீங்கள் விரும்புகின்றீர்களா? நீங்கள் தற்போது எனக்கு ஆறுதல் கொடுக்கின்றீர்கள். ஆனால் எனக்குப் பிறகு வெளி வர முடியாத அளவில் என் மீது துன்பம் வந்து விடக் கூடாது.

அடுத்து ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தனது மகனாகிய அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம், எனது கடனுக்கான பொறுப்பை நீர் ஒப்புக் கொள்ளும் என்று கூறினார்கள். எனவே அன்னார் அந்த பொறுப்பை ஒப்புக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தற்போது நல்லடக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்குள் தான் பொறுப்பேற்றுக் கொண்ட கடனுக்கு சாட்சிகளாக அன்னாரின் மகன் ஷூராவின் ஊழியர்களையும், சில கிறிஸ்துவர்களையும் சாட்சியங்களாக ஆக்கிக் கொண்டார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நல்லடக்கம் நடைபெற்று ஜுமுஆ நாள் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் கடனாக தொகையை பெற்றுக் கொண்டு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சென்றார்கள். சில சாட்சிகளுக்கு முன்னால் அது தொடர்பான கடமையை நிறைவேற்றி விட்டார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 273 – பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

கடனை கொடுப்பது குறித்து மற்றோர் அறிவிப்பு வஃபாவுல் வஃபா என்ற புத்தகத்தில் கிடைக்கின்றது. ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரண நேரம் அருகில் வந்தபோது அன்னார் மீது கடன் இருந்தது. அன்னார் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களை அழைத்தார்கள். என் மீது அல்லாஹ்வின் செல்வங்களில் சில கடன் உள்ளது. என் மீது எந்த கடனும் இல்லாத நிலையில் நான் அல்லாஹ்வை சந்திக்க விரும்புகின்றேன். எனவே அந்த கடனை அடைப்பதற்காக வசித்து வந்த அந்த வீட்டை நீங்கள் விற்று விடுங்கள். ஒருவேளை இன்னும் செல்வம் எஞ்சியிருந்தால் பனூ அதீயிடம் கேளுங்கள். அதன் பிறகும் கடன் எஞ்சியிருந்தால் குரைஷிகளுக்குப் பிறகு வேறு எவரிடமும் செல்ல வேண்டாம் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்களிடம் சென்றார்கள். ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் வீட்டை வாங்கிக் கொண்டார்கள். அது தாருல் கலா என்று அழைக்கப்படுகின்றது. அன்னார் அந்த வீட்டை விற்று விட்டார்கள். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடனை அடைத்து விட்டார்கள். எனவே அந்த வீடு தாரு கலாயி தைனி உமர் என்று கூறப்படுகின்றது. அதாவது எந்த வீட்டின் மூலமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கடன் அடைக்கப்பட்டதோ அந்த வீடு என்பது அதன் பொருளாகும்.

(அல்லாமா நூருத்துன் அவர்கள் எழுதிய வஃபாவுல் வஃபா.... என்ற நூல் தொகுதி 1 பாகம் 2 பக்கம் 222, பாகிஸ்தானில் அச்சிடப்பட்டது)

இந்த குறிப்பு இன்னும் தொடர்கிறது. இன்ஷா அல்லாஹ் பின்னர் எடுத்துரைக்கப்படும்.

(தமிழில்: மவ்லவி அ.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

......☆......☆......☆......

## ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் கேட்கப்பட்ட முக்கியமான கேள்விகளும், அதற்குரிய பதில்களும்

(பகுதி – 13)

**கேள்வி:** லஜ்னா உறுப்பினர்கள் பத்திரிகைகளில் கட்டுரை எழுதுவதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்? என்ற கேள்வியை இந்த சந்திப்பில் லஜ்னா உறுப்பினர் ஒருவர் ஹுஸூர் அக்தஸ் (அய்ய) அவர்களிடம் முன் வைத்தார். அதற்கு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

**பதில்:** என்னென்ன Contemporary Issues வருகின்றனவோ மேலும் பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதப்படுகின்றனவோ அல்லது சமூக வலைதளங்களில் இன்று இன்ன இன்ன விஷயங்கள் பேசப்படுகின்றன என்று நீங்கள் எதனை உணர்கின்றீர்களோ அதற்கு நீங்கள் சமூக வலைதளங்களிலும், லஜ்னாவின் வலைதளத்திலும் பதில் கொடுங்கள். அதன் மூலம் Awareness ஏற்படும். மேலும் இது தான் அந்த கேள்விக்கு சரியான பதிலாகும் என்று ஒவ்வொருவருக்கும் தெரிய வேண்டும். இதுவே அசல் விஷயமாகும். அதேபோன்று கட்டுரை எழுதக் கூடியவர்கள் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது அந்த Issues களைப் பற்றி இஸ்லாத்தின் தற்காப்பிற்காக பத்திரிகைகளில் இவ்வாறு எழுத வேண்டும். அதாவது இஸ்லாம் இவ்வாறு கூறுவதாக நீங்கள் கூறுகின்றீர்கள். ஆனால் உள்ளபடியே இஸ்லாத்தின் போதனை இதுவே ஆகும் என்று நீங்கள் பத்திரிகைகளில் எழுத வேண்டும். எனவே Attraction உருவாகுவதற்காக சமூக வலைதளங்களில் பேசப்படும் பல்வேறு தலைப்புகள் தொடர்பாக நீங்கள் பதில் எழுத வேண்டும் என்று பதில் எழுதக்கூடிய லஜ்னாக்களை ஊக்குவிக்க வேண்டும். அதன் மூலம் அதிக அதிகமான மக்கள் படிப்பார்கள். மேலும் கவனம் செலுத்துவார்கள். இதனால் உங்கள் பக்கம் கவனம் திரும்பும். பெண்களுக்கு சுதந்திரம் இல்லை. பெண்களுக்கு பர்தா என்ற Restrictions உள்ளன. பெண்கள் மீது இன்ன இன்ன தடைகள் உள்ளன. பெண்கள் மீது இந்த அநீதி இழைக்கப்படுகிறது என்று மேற்கத்திய நாடுகளில் பெண்கள் தொடர்பான விவகாரங்களில் ஆட்சேபனைகள் எழுப்பப்படுகின்றன. எனவே இது தொடர்பாக நீங்கள் இவ்வாறு எழுத வேண்டும்: நீங்கள் இவ்வாறு கூறுகின்றீர்கள். நான் ஒரு பெண்ணாக இருக்கின்றேன். நான் இன்ன இன்ன விஷயங்களை எழுதியுள்ளேன் என்று பெண்களே அதற்கு பதில் எழுத வேண்டும். இங்கு UK விலும் லஜ்னாக்கள் (பதில்) எழுதுகின்றனர். அதனால் நல்ல தாக்கம் ஏற்படுகின்றது. ஆண்கள் அதற்கு பதில் கொடுப்பதற்கு பகரமாக பெண்களே அதற்கு பதில் கொடுப்பதால் மிகவும் நல்ல தாக்கம் ஏற்படுகின்றது. எனவே நீங்கள் உங்களது ஒரு குழுவை உருவாக்குங்கள். உங்களுக்கு அது தொடர்பான அறிவும் இருக்க வேண்டும். இஸ்லாமிய போதனைகளைப் பற்றிய அறிவும் இருக்க வேண்டும். அவ்வாறு பதில் எழுதும்போது எதிர் தரப்பை Impress செய்யும் விதமாக தயாரிப்புகள் செய்து கொண்டு முறையாக Facts and Figures ஐ அடிப்படையாகக் கொண்டு பதில் எழுத வேண்டும்.

**கேள்வி:** ஹாலந்தில் இப்போதும் Independently நன்றாக எழுதக்கூடிய குறைவான லஜ்னா உறுப்பினர்களே இருக்கின்றனர். அதனால் நாங்கள் என்ன செய்வது? என்று ஒரு லஜ்னா உறுப்பினர் இதே சந்திப்பில் ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களிடம் கேட்டார். அதற்கு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

**பதில்:** குறைவாக இருப்பவர்களுக்கு நீங்கள் Guide செய்தால் அவர்கள் தயாராகி விடுவார்கள் அல்லவா? இரண்டு நபர்களைக் கொண்ட நான்கு நபர்களைக் கொண்ட, ஆறு நபர்களைக் கொண்ட, எட்டு நபர்களைக் கொண்ட (எத்தனை நபர்கள் இருப்பார்களோ அதற்கேற்ப) ஒரு குழு தயாராகி விடும் அல்லவா? பின்னர் அவர்களைப் பார்த்து, பார்த்து மேலும் பலர் தயாராகிக் கொண்டிருப்பார்கள். குறைவு அல்லது கூடுதலுக்கான கேள்வி இல்லை. பணி செய்யக்கூடியவர் ஒருவர் இருந்தாலும் புரட்சி வந்து விடும். எனவே நீங்கள் பதில் கொடுக்க தொடங்கி விட்டால் பின்னர் சுயமே பதிலைப் பெறுவதற்கு மக்கள் உங்களை பின் தொடர்ந்து விடுவார்கள். பின்னர் நீங்கள் மேலும் பதில் எழுதத் தொடங்கி விடுவீர்கள். அதன் மூலம் நாமும் பங்கு பெற வேண்டும். நாமும் எழுத வேண்டுமென்று மற்றவர்களுக்கும் encouragement (ஊக்கம்) ஏற்பட்டு விடும். எந்தவொரு விஷயத்தையும் செய்வதற்கு அல்லது மக்களை தூண்டுவதற்கு ஒரு incentive இருக்கும். அந்த incentive என்னவென்றால், இரண்டு, நான்கு பெயர்கள் பத்திரிகைகளில் வந்துவிடும்போது மற்றவர்களுக்கும் ஆர்வம் வந்து விடும். அதாவது நமது பெயரும் வர வேண்டும். நாமும் எழுதுவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் உருவாகி விடும். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களும் முன்னேறிக் கொண்டே செல்வர்.

(ஸஹூர் அஹ்மது கான் – முபல்லிக் PS அலுவலக பதிவுத்துறை, இலண்டன். (நன்றி: அல்ஃபஸ்ல் இன்டர்நேஷனல், 9 ஏப்ரல் 2021)

## *126 வது காதியான் ஆண்டு மாநாடு*

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள். (நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களுடன் அஹ்மதிய்யா ஜமாஅத் கேம்பியாவின் தேசிய செயற்குழுவின் காணொலி சந்திப்பு

அல்ஹம்துலில்லாஹ் ஹுஸூர் (அய்ய) அவர்கள் பரிவுகூர்ந்து 14 பிப்ரவரி 2021 ஞாயிற்றுக்கிழமை அன்று கேம்பியாவின் தேசிய செயற்குழுவிற்கு சந்திப்பிற்கான கண்ணியத்தை வழங்கினார்கள். இந்த சந்திப்பு மஸ்ஜித் பைத்துஸ் ஸலாம் Head Quarter இலண்டின் பேஞ்சல் என்ற இடத்தில் நிகழ்ந்தது. தேசிய செயற்குழு உறுப்பினர்களும், மண்டல தலைவர்களும், ஏரியா மிஷனரிகளும், மருத்துவமனைகள், பள்ளிக்கூடங்கள் மற்றும் Printing Press ன் தலைமை நிர்வாகிகளும், கேம்பியாவின் Humanity First Chairman மற்றும் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் செயலர்களும் சந்திப்பிற்கான கண்ணியத்தை பெறக்கூடியவர்களாக இருந்தனர்.

பகலில் 12:15 மணியளவில் ஆரம்பமான இந்த சந்திப்பு 1:30 க்குப் பிறகு நிறைவுபெற்றது. ஹுஸூர் (அய்ய) அவர்கள் செயற்குழு உறுப்பினர்களின் அறிமுகத்தை பெற்றார்கள். மேலும் அவர்களின் துறைகள் தொடர்பான விஷயங்களை விசாரித்து பணிகளை சரியாகவும், சிறப்பான முறையிலும் செய்வது தொடர்பான வழிகாட்டலை வழங்கினார்கள்.

இதேபோன்று ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் மருத்துவமனைகள் மற்றும் பள்ளிக்கூடங்கள் தொடர்பாகவும் வழிகாட்டல் வழங்கினார்கள். மேலும் முரப்பிமார்கள் மற்றும் முபல்லிக்மார்கள் எவ்வாறு ஜமாஅத் உறுப்பினர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும் தர்பிய்யத் செய்ய வேண்டும்? என்று ஹுஸூர் (அய்ய) அவர்கள் வழிகாட்டினார்கள்.

சந்திப்பின்போது MTA கேம்பியா, அஹ்மதிய்யா Hospital டேலேண்டின் Head Quarter, பைத்துஸ் ஸலாம் Complex, அஹ்மதிய்யா Printing Press மற்றும் தற்போதைய நாட்களில் Printing Machine மூலமாக அச்சிடப்படும் Five Colour தொடர்பான அறிமுகங்களையும், இரண்டு வீடியோக்களுடன் ஹுஸூர் (அய்ய) அவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

சந்திப்பின் நிறைவின்போது கேம்பியாவின் அமீர் மதிப்பிற்குரிய பாபா எஃப் தடாவ்லே ஸாஹிப் ஹுஸூர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்கள். மேலும் குத்தாமுல் அஹ்மதிய்யாவில் பணி செய்யும் சில இளைஞர்களும் Central Staff மற்றும் Printing Press ல் பணி செய்து வரும் ஊழியர்களும் ஹுஸூர் (அய்ய) அவர்களுக்கு ஸலாம் கூற விரும்புகின்றார்கள் என்று அன்னார் ஹுஸூர் (அய்ய) அவர்களிடம் விண்ணப்பித்தார்கள். எனவே அவர்கள் அனைவரும் சந்திப்பு நிகழும் இடத்திற்குள்ளே வந்தனர். மேலும் ஹுஸூர் (அய்ய) அவர்களைப் பார்த்து தனது கண்களை குளிர்ச்சியாக்கிக் கொண்டனர். மேலும் உள்ளத்தை அமைதிப்படுத்திக் கொண்டனர்.

கலந்து கொண்ட அனைவரும் சந்திப்பிற்குப் பிறகு இன்று நீண்ட காலத்திற்குப் பிறகு பல தாகம் கொண்ட ஆன்மாக்களுக்கு ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்களின் சந்திப்பு கிடைத்து விட்டது என்று ஒருவருக்கொருவர் வாழ்த்துக்கள் கூறிக் கொண்டனர்.

அஹ்மதிய்யா ஜமாஅத் கேம்பியாவிற்கு இந்த சந்திப்பிலிருந்து உரிய அளவில் பயன் பெறுவதற்கும், அதன் அருட்களிலிருந்து பயன் பெற்று வேகமான முன்னேற்றம் அடைவதற்கான நற்பேறு பெறுவதற்கும் அல்லாஹ் அருள் செய்வானாக.

(செய்யதுல் ஹஸன் ஷா, நாயிப் அமீர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் கேம்பியா – நன்றி: அல்ஃபஸல் இண்டர்நேஷனல் பத்திரிகை 16 பிப்ரவரி 2021)

*(12 வது பக்கத்தின் தொடர்ச்சி…)*

நினைவிற் கொள்ளுங்கள். நீங்கள் எந்த உணர்வுடன் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் இந்த அன்பளிப்பை முன் வைத்துள்ளீர்களோ அது கடனாகவே இருந்து விடக்கூடாது. மாறாக, மிக விரைவாக கடனை அடைப்பதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். அதனை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அப்போது தான் நீங்கள் உங்களின் தூய்மையான தியாகத்தால் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் அந்த அன்பளிப்பை முன் வைப்பவர்களாக இருக்க முடியும். ஜமாஅத்தின் உறுப்பினர்களாகிய உங்கள் மீது நல்லெண்ணம் கொண்டவாறும், எதிர்பாப்பு வைத்தவாறும் இந்த கடனை ஜமாஅத் வாங்கியுள்ளது. அதாவது ஜமாஅத் உறுப்பினர்கள் தங்களது தியாகங்களால் இந்த பள்ளிவாசலை கட்டுவார்கள். அந்த தியாகங்கள் தாதமதமாக செலுத்தப்பட்டாலும் சரியே. ஏனென்றால் அப்போது தான் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியவர்களாக ஆக முடியும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இவ்வுலகில் எவர் அல்லாஹ்விற்காக வீட்டை கட்டினாரோ அல்லாஹ் சொர்க்கத்தில் அவருக்காக வீட்டை கட்டுவான்.

எனவே அல்லாஹ்வின் சொர்க்கத்தை பெற விரும்பாத நபர் யார் தான் இருக்கின்றார்? தனக்கு சொர்க்கத்தில் வீட்டை விரும்பாத நபர் யார் தான் இருக்க முடியும்? நிச்சயமாக எந்தவொரு அஹ்மதியும் தான் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவராக இருக்கக்கூடாது என்று ஒருபோதும் சிந்திக்க மாட்டார். அவர் சொர்க்கத்தில் அல்லாஹ்வின் புறமிருந்து அன்பளிப்பாக கிடைக்கக்கூடிய வீட்டிற்கு கண்டிப்பாக ஆசைப்படுவார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த அழகு உலகின் எல்லா இடத்திலும் காணக் கிடைக்கின்றது. அதாவது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் பொருள் தியாங்களில் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு பங்கு பெறக் கூடியவர்களாக உள்ளனர்.

இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பொருள் தியாகத்திற்கான உணர்வை தமது சஹாபிகளிடம் ஏற்படுத்தி உள்ளார்கள். ஏனென்றால் அதன் மூலமே இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகின் மூலைகள் வரை எட்ட வைக்க வேண்டியதிருந்தது. அதனைக்கண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: எல்லையற்ற தூய்மையையும், நேசத்தையும் பார்த்து ஆச்சரியம் ஏற்படுகின்றது.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: தற்போது உலகில் இன்று 100 ஆண்டுகள் ஆன பிறகும் ஜமாஅத் உறுப்பினர்களின் நிலை இவ்வாறு உள்ளது. யார் எந்த நாட்டுடன் தொடர்புடையவராக இருக்கின்றார் என்பதற்கு அப்பாற்பட்டு நன்றியுணர்விலும், தூய்மையிலும் அனைத்து அஹ்மதிகளும் முன்னேறி உள்ளனர். தற்போது நியூஸிலாந்து ஜமாஅத்தின் எண்ணிக்கையில் 60 சதவிகித மக்கள் ஃபிஜி நாட்டிலிருந்து இங்கு வந்துள்ளனர். சுமார் 23 சதவிகிதம் பாகிஸ்தானி முஹாஜிர்கள் ஆவர். ஏனையவர்கள் மற்ற சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர். ஆக இது ஒரு சிறிய ஜமாஅத்தாக உள்ளது. ஆயினும் பல்வேறு சமுதாயங்களைச் சேர்ந்த மக்கள் உள்ளனர். ஆனால் தூய்மையிலும், நன்றியுணர்விலும் ஒவ்வொருவரும் மற்றவரை விட முன்னேறுவதற்கு முயற்சி செய்கின்றார்.

ஆயினும் இதனை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது வெளிப்படையான தூய்மையும், தற்காலிகமான தியாகங்களும் அது நேரத்தின் தியாகமாக இருக்கட்டும் அல்லது பொருள் தியாகமாக இருக்கட்டும். இவை மட்டுமே ஒருவரை ஓர் உண்மையான நம்பிக்கையாளராக ஆக்குவதற்கு போதுமானதல்ல. மாறாக, நிரந்தர மனப்பான்மையுடன் நன்மைகளில் அடியெடுத்து வைப்பதும், இறையச்சத்தின்படி நடப்பதும், தமது பிறப்பின் நோக்கத்தை எப்போதும் நினைவில் வைப்பதும் ஒரு உண்மையான நம்பிக்கையாளரின் அடையாளமாகவும் இருக்க வேண்டும். பிறப்பின் நோக்கம் தொடர்பாக இறைவன் நமக்கு கவனமூட்டியுள்ள விஷயங்களை கண் முன் நிறுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: எனவே நம்மில் ஒவ்வோர் அஹ்மதியும் இந்த சிறப்பம்சங்களைக் கொண்ட உண்மையான நம்பிக்கையாளராக ஆக வேண்டும். இங்கு தொழுகை சென்டர்கள் இதற்கு முன்னரும் இருந்தன. ஆயினும் தொழுகை சென்டர் மற்றும் முறையான பள்ளிவாசல் இரண்டிலும் ஒரு வெளிப்படையான வித்தியாசம் உள்ளது. சென்டர் ஒரு ஹால் ஆக உள்ளது. பள்ளிவாசலில் குவிமாடமும் இருக்கின்றது. மினாராவும் இருக்கின்றது. பள்ளிவாசல் என்ற பெயரிலேயே அதற்கு தனியாக புனிதத்தன்மை அதிகரிக்கின்றது. நீங்கள் முறையாக பள்ளிவாசலைக் கட்டுங்கள் என்று நான் எனது முந்தைய சுற்றுப் பயணத்தில் உங்களிடம் கூறி இருந்தேன் என்றால் அதன் நோக்கம் இதுவாகும். அதாவது நாம் செல்வம் மற்றும் நேரத்தின் தியாகத்திற்குப் பிறகு கட்டிய பள்ளிவாசலுக்குரிய உரிமையை நாம் வழங்க வேண்டும் என்பதை பள்ளிவாசலின் மினாராவும், குவிமாடமும் உங்களுக்கு நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டும்.

இரண்டாவது நோக்கம் என்னவென்றால், பள்ளிவாசலின் மினாராவும், குவிமாடமும் சுற்றுப்புற சூழல்களை கவனமூட்டக் கூடியதாக இருக்கின்றது. இதன் மூலம் தப்லீக்கின் பாதைகளும் திறக்கின்றன. இதன் பக்கம் மக்களுக்கு கவனம் ஏற்படுகின்றது. இஸ்லாத்தின் உண்மையான சித்திரத்தை பார்க்க வேண்டும் என்ற தேடுதலில் இங்கு மக்கள் வருவார்கள். அல்லது இந்த மக்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்? இவர்கள் எப்படிப்பட்ட முஸ்லிம்கள்? என்ற தேடுதலிலும் மக்கள் இங்கு வருவர்.

அல்லாஹ்வின் அருளால் பள்ளிவாசல் கட்டுமானத்துடன் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் அறிமுகம் பல மடங்கு அதிகரித்து விட்டது. இந்த அறிமுகத்தின் காரணமாக பின்னர் மீண்டும் இந்த பள்ளிவாசலின் உரிமையை வழங்குவதன் பக்கம் கவனமும் உருவாகின்றது. இங்கு வசிக்கக் கூடியவர்கள் இந்த பள்ளிவாசலின் உரிமையை வழங்கக் கூடியவர்களாக இருக்கின்றனர். நாம் இந்த உரிமையை வழங்க வேண்டும் என்று ஜமாஅத் உறுப்பினர்களுக்கு இதன் பக்கம் கவனம் உருவாகின்றது. உருவாகவும் வேண்டும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறுகின்றார்கள்: பள்ளிவாசலுக்குரிய உரிமைகள் என்ன? முதலாவது உரிமை என்னவென்றால், உங்களது வியாபாரங்கள், உங்களது மும்முரமான பணிகள் போன்றவை உங்களை அல்லாஹ்வை நினைவு கூருவதிலிருந்து விலக்கக் கூடியவையாக இருக்கக் கூடாது. மாறாக, இந்த வியாபாரங்கள் தொழுகைகள் மற்றும் இறைவனை நினைவு கூருவதன் பக்கம் உங்களுக்கு கவனமூட்டக் கூடியதாக இருக்க வேண்டும். حَيَّ عَلَى الصَّلٰوة என்று சப்தம் வரும்போது மக்களே! தொழுகையின் பக்கம் வாருங்கள். வியாபாரத்தை மறந்து விடுங்கள். அனைத்து வியாபாரங்களையும் மறந்து விட்டு பள்ளிவாசலின் பக்கம் விரையுங்கள் (என்ற எண்ணம் வர வேண்டும்). இதையும் தற்காலத்தில் நம்மால் கூற முடியும். அதாவது நாங்கள் மிகத் தொலைவில் இருக்கின்றோம். பாங்கு உள்ளே கொடுக்கப்படுகின்றது. சப்தம் எங்களுக்கு வருவதில்லை. அவ்வாறிருக்கும்போது பின்னர் என்ன செய்வது? என்று ஒருவர் கேட்கலாம். அப்படிப்பட்ட நபருக்கு நீங்கள் இந்த உணர்வை ஊட்டிக் கொண்டே இருக்க வேண்டும். நாம் பள்ளிவாசல் கட்டியுள்ளோம். ஏனென்றால் அல்லாஹ்வின் வணக்கத்திற்குரிய உரிமையை வழங்க வேண்டும். நமது பிறப்பின் நோக்கத்தை அடையாளம் காண வேண்டும் என்பதற்காகவே நாம் பள்ளிவாசலை கட்டியுள்ளோம். இந்த உணர்வை நீங்கள் அவர்களுக்கு எப்போதும் ஊட்டிக் கொண்டே இருக்க வேண்டும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: இரண்டாவதாக, நான் முன்னரும் பல முறை கூறியுள்ளேன். இன்றைய நாட்களில் ஒவ்வொருவரும் கைபேசிகளை சட்டைப் பையில் வைத்துக் கொண்டு திரிகின்றனர். எனவே அதன் மூலம் அவர் அதற்கான சிறந்த பயன்பாட்டை செய்ய வேண்டும். அதாவது தொழுகைக்கான நேரங்களில் பாங்கின் குரல் பாங்கின் வடிவிலேயே அலாரமாக ஒலிக்க வேண்டும். எவர் பள்ளிவாசலுக்கு அருகில் இருக்கின்றாரோ அவர் பள்ளிவாசலுக்கு வரட்டும். மேலும் எவர் தொலைவில் இருக்கின்றாரோ அவர் தமது தொழுகையை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் செலுத்தட்டும். தமது பணி இடத்திலேயே தொழுகைகளை கருத்தில் கொண்டவாறு தொழுகைகளை நிறைவேற்றும்போது உங்களது அக்கம் பக்கத்திலுள்ள மக்களுக்கும் நீங்கள் யார் என்பதன் பக்கம் கவனம் ஏற்படும்.

பின்னர் பள்ளிவாசலின் கட்டிடம் அறிமுகத்திற்கான ஒரு வழிமுறையாகி விடும். நீங்கள் உங்களது நண்பர்களை பள்ளிவாசலுக்கு வருவதன் பக்கம் அழைப்பு கொடுத்தீர்கள். இவ்வாறு அல்லாஹ்வின் நினைவும் கூரப்பட்டுக் கொண்டிருக்கும். அல்லாஹ்வின் தூதுச் செய்தி அந்நியர்களுக்கு எட்ட வைக்கின்ற தொடரும் அத்துடன் தொடங்கி விடும். இவ்வாறு பின்னர் நன்மைகளின் தொடர் அல்லாஹ்வின் நெருக்கத்தை பெற்றுத் தரக்கூடியதாக ஆக்கி விடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த புரட்சியை தமது சஹாபிகளிடத்திலும் ஏற்படுத்தி இருந்தார்கள். அல்லாஹ் இந்த வசனங்களில் அந்த சஹாபிகளின் உதாரணத்தையே வழங்குகின்றான். அந்த சஹாபிகள் கோடிக்கணக்கான பணத்திற்கான வியாபாரத்தை செய்து வந்தனர். ஆனால் அல்லாஹ்வின் நினைவால் அவர்களின் உள்ளங்கள் நிறைந்திருந்தன. தொழுகைகளை நிறைவேற்றுவதன் பக்கம் கவனம் இருந்து வந்தது. பொருள் தியாகத்தின் பக்கம் கவனம் இருந்து வந்தது.

இந்தப் புரட்சியை உருவாக்குவதற்காக இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை அனுப்பியுள்ளான். நீங்கள் உங்களின் தொடர்புகளை அல்லாஹ்வுடன் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களது தொழுகைகளை பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களது செல்வங்களை தூய்மைப்படுத்துவதற்காக பொருள் தியாகங்களும் செய்யுங்கள். இதற்காகவே அல்லாஹ் அன்னாரை அனுப்பியுள்ளான்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: நான் பெரும்பாலும் இதனைக் கூறி வருகின்றேன். ஜமாஅத்தின் வரலாறும் நமக்கு இதனையே கூறுகின்றது. ஜமாஅத் உறுப்பினர்களின் நடவடிக்கையும் நமக்கு இதையே கூறுகின்றது. அதாவது பொருள் தியாகங்களில் ஜமாஅத் அல்லாஹ்வின் அருளால் முன்னேறி உள்ளது. முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதன் பக்கம் கவனமும் இருக்கின்றது. ஆனால் தொழுகைகளை நிலைநாட்டுவதன் பக்கம் கவனம் செலுத்துவது மிக அவசியமாக உள்ளது. இறைவணக்கங்களின் தரத்தை பெறுவதற்கும் இன்னும் அதிக தேவை உள்ளது. எனவே இதன் பக்கமும் கவனம் இருக்க வேண்டும். பள்ளிவாசல்களை நிரப்ப வேண்டும். ஜமாஅத்தாக தொழுகைகளை நிறைவேற்றும்போதுதான் தொழுகையை நிலைநாட்டுதல் என்பதன் உண்மையான வடிவம் அமைகின்றது. இங்கு ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்ற வேண்டும் என்பதே பள்ளிவாசல் கட்டுமானத்தின் நோக்கம் ஆகும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: எனவே நினைவிற் கொள்ளுங்கள். நான் கூறியதுபோன்று இந்த பள்ளிவாசல் கட்டுமானத்துடன் உங்களிடத்தில் முன்பை விட அதிகமான தூய மாறுதல்கள் உருவாக வேண்டும். அதன் மூலமே தப்லீக்கிலும் புதிய வழிகள் பிறக்கும். இன்ஷா அல்லாஹ். எனவே உங்களின் செயல் நிலைகளை பார்த்து மக்களுக்கு இஸ்லாத்தின் பக்கம் கவனமும் உருவாகும். எனவே உங்களின் செயல்களையும் அல்லாஹ்வின் திருப்திக்கேற்ப ஆக்கிக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: தப்லீக் தொடர்பாகவும் கிளை அமைப்புகள் மற்றும் ஜமாஅத் அமைப்பிற்கும் சிறப்பான கவனமூட்ட விரும்புகின்றேன். இங்கும் நீங்கள் உங்களது பாரம்பரிய தப்லீக் வழிமுறையை மட்டும் நம்பி அமராதீர்கள். நாம் என்ன செய்கின்றோமோ அது நமக்கு போதுமானதாகும் என்று அமர்ந்து விடாதீர்கள். மாறாக, தப்லீக்கிற்கான புதிய, புதிய வழிகளை தேடுங்கள். புதிய, புதிய வழிமுறைகளை தேடுங்கள். அதிக அதிகமாக இஸ்லாத்தின் அறிமுகத்தை பரப்புங்கள். தற்போது மோரி மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கம் நடந்துள்ளது. அந்தப் பணியும் ஜமாஅத்திற்கு ஓர் அறிமுகத்தை வழங்கியுள்ளது.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: எனவே அல்லாஹ் செய்துள்ள இந்த அனைத்து ஏற்பாடுகளையும் நாம் அல்லாஹ்வின் மார்க்கத்தை பரப்புவதற்கு பயன்படுத்தினால் பின்னர் நாம் இறைவனின் திருப்தியை பெறக்கூடியவர்களாக இருப்போம். எனவே இன்று எங்கு நமது இறைவணக்கத்திற்குரிய உரிமையை வழங்குவதற்கு முயற்சி செய்ய உடன்படிக்கை எடுப்போமோ அங்கு உயர்தரமான நல்லொழுக்கத்தின் மூலமாக ஒருவருக்கொருவர் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்தவாறு அன்பு மற்றும் நேசத்துடன் மற்றும் ஒத்துழைப்புடன் முன்னேற வேண்டும். பின்னர் இந்த பகுதியின் மக்களுக்கும் இஸ்லாத்தின் உண்மையான அறிமுகத்தை ஏற்படுத்த வேண்டும். இஸ்லாத்திற்கெதிராக உருவாக்கப்பட்டுள்ள தப்பெண்ணங்களை அகற்றுவதற்காகவும் முயற்சி செய்ய வேண்டும். எண்ணிக்கை குறைவாகத் தான் உள்ளது. ஆயினும் எண்ணம் உறுதியானதாக இருந்தால் வீரனைப் போன்ற நெஞ்சுரம் இருந்தால் இந்த குறைவான எண்ணிக்கையும் கூட நிறைய பணிகளை செய்ய முடியும். அல்லாஹ் அனைவருக்கும் இதற்கான நற்பேறை வழங்குவானாக.

(தொடரும்....)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

## மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

உண்மையாளர்களின் சிறப்புகளைப் பெறுவதற்கு அவசியமாகும். ஒருவரைக் குறித்து தீய எண்ணம் தோன்றினால் அதிகமாக இஸ்திஃபார் செய்ய வேண்டும். மேலும் அந்த துன்பம் மற்றும் அதன் தீய விளைவுகளிலிருந்து அதாவது அந்த தப்பெண்ணத்தின் பின்னால் வரக்கூடிய தீய விளைவுகளிலிருந்து தப்பிப்பதற்கு அல்லாஹ்விடம் துஆக்கள் செய்ய வேண்டும். அதனை ஒருபோதும் சாதாரண விஷயமாக கருதக் கூடாது. இது மிகவும் அபாயகரமான நோய் ஆகும். அதனால் மனிதன் மிகவும் விரைவாக அழிந்து விடுகின்றான்.

சுருக்கமாக, தப்பெண்ணம் மனிதனை அழித்து விடுகின்றது. எந்த அளவுக்கென்றால் நரகவாசிகள் நரகத்தில் வீசப்படும்பொழுது அல்லாஹ் அவர்களிடம் இவ்வாறு கூறுவான்: உங்களின் பாவம் என்னவென்றால், நீங்கள் அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொண்டீர்கள். சில மக்கள் இந்த வகைப்பட்டவர்களாக இருக்கின்றனர். அதாவது அல்லாஹ் தவறிழைத்தவர்களை மன்னித்து விடுகின்றான். மேலும் நல்லவர்களுக்கு தண்டனை வழங்குகின்றான் என்று அவர்கள் கருதுகின்றனர். இதுவும் இறைவனின் மீதான தப்பெண்ணமாகும். ஏனென்றால் இது இறைவனின் நீதி என்ற பண்புக்கு எதிரானதாகும். மேலும் திருக்குர்ஆனில் நன்மை மற்றும் அதன் விளைவுகளை குறித்து எதனை இறைவன் நிர்ணயித்துள்ளானோ அதனை முற்றிலும் வீணாக்கி விடும். மேலும் பயனற்றதாகவும் ஆக்கி விடும். எனவே நினைவிற் கொள்ளுங்கள். தப்பெண்ணத்தின் முடிவு நரகமாகும். அதனை சாதாரண நோயாக கருதாதீர்கள். தப்பெண்ணத்திலிருந்து அவநம்பிக்கையும், அவநம்பிக்கையிலிருந்து குற்றங்களும், குற்றங்களிலிருந்து நரகமும் கிடைக்கின்றது. மேலும் இது உண்மையின் வேரை துண்டிக்கக்கூடிய விஷயமாகும். எனவே நீங்கள் அதிலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள். மேலும் உண்மையாளர்களின் சிறப்புகளை பெறுவதற்காக துஆக்கள் செய்யுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 336 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

## முதல் பக்கத்தின் தொடர்ச்சி...
## ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் கூற்று...

கூறுகின்றனர். அதன் பொருள் முழுத் திருக்குர்ஆனையும் கேட்பது என்பதல்ல. மாறாக அதன் சில பகுதியை கேட்பது பொருளாக அமைகின்றது. எனவே الْقُرْاٰنَ الْعَظِيْمِ என்ற சொல் சூரா ஃபாத்திஹாவைக் குறித்து இந்தக் காரணத்தால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது அது மகத்துவமிக்க திருக்குர்ஆனின் பகுதியாகும். அதற்கு (திருக்குர்ஆனிற்கு) வெளியில் இல்லை. இந்த பொருள்களின் அடிப்படையில் எந்த மக்கள் சூரா ஃபாத்திஹாவை திருக்குர்ஆனின் அங்கமாக கருதுவதில்லையோ அவர்களின் எண்ணங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. ஹதீஸ்களிலும் சூரா ஃபாத்திஹாவின் பெயர் குர்ஆனே அழீம் (மகத்துவமிக்க திருக்குர்ஆன்) என்று கூறப்பட்டுள்ளது. எனவே முஸன்னத் அஹ்மது பின் ஹம்பலில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களின் இந்த அறிவிப்பு இடம் பெற்றுள்ளது.

هِيَ اُمُّ الْقُرْاٰنِ وَهِيَ السَّبْعُ الْمَثَانِيْ وَهِيَ الْقُرْاٰنُ الْعَظِيْمُ பொருள்: சூரா ஃபாத்திஹா உம்முல் குர்ஆனாகவும், சப்வுல் மஸானியாகவும் (மீண்டும் மீண்டும் ஓதப்படக் கூடியதாகவும்) உள்ளது. மேலும் அது குர்ஆனே அழீம் (மகத்துவமிக்க திருக்குர்ஆன்) ஆகவும் உள்ளது. (முஸ்னத் அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 2 பக்கம் 448)

குர்ஆனே அழீம் என்பது முழு குர்ஆனின் பெயர் இல்லை என்பது இந்த ஹதீஸின் பொருளல்ல. இரண்டு பொருளையும் ஒரே நேரத்தில் கொடுக்க முடியும். ஏனென்றால் ஒன்று மற்றொன்றிற்கு எதிரானதல்ல. சூரா ஃபாத்திஹா குர்ஆனே அழீம் (மகத்துவமிக்க திருக்குர்ஆன்) ஆகும். அதேபோன்று முழுத் திருக்குர்ஆனும் குர்ஆனே அழீம் ஆகும். ஏனென்றால் இந்த இரண்டு பொருள்களும் பல்வேறு பார்வைகளின் காரணமாக உள்ளன. இரண்டும் தத்தமது இடத்தில் சரியானதாகும். குர்ஆனே அழீம் என்பதற்கு முழு திருக்குர்ஆன் என்று பொருள் கொள்ளப்பட்டால் அந்நிலையில் இவ்வாறு பொருள்படும். அதாவது நாம் உங்களுக்கு சுருக்கமான குர்ஆனை அதாவது சூரா ஃபாத்திஹாவையும் வழங்கியுள்ளோம். அதுமட்டுமின்றி ஒரு விரிவான திருக்குர்ஆனையும் வழங்கியுள்ளோம். எனவே அதன் போதனையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அந்த மக்களுடன் தர்க்கம், விவாதத்திற்கான எண்ணத்தை விட்டு விடுங்கள். முஸ்லிம்களுக்கு திருக்குர்ஆனின் பொருள்களை மிகவும் அழுத்தத்துடன் கற்றுக் கொடுப்பதற்கான நேரம் தற்போது வந்து விட்டது. அப்போது தான் அவர்கள் புதிய அமைப்பை நிர்வகிப்பதற்கு தகுதி படைத்தவர்களாக ஆக முடியும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 14பக்கம் 110 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 18 Nov 2021 Issue No. 46

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் (2013 செப்டம்பர்)

### 01 நவம்பர் 2013 (வெள்ளிக்கிழமை)

ஹுஸூர் (அய்ய) அவர்கள் காலை 5:15 மணியளவில் மஸ்ஜித் பைத்துல் முகீத்திற்கு வருகை தந்து ஃபஜர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள்.

Quest Apartments என்ற இடத்தில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் தங்கியுள்ளார்கள். இங்கிருந்து மஸ்ஜித் பைத்துல் முகய்யதிற்கு செல்வதற்கு 20 நிமிட பயண தொலைவாகும். ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் காலையில் அலுவலக கடிதங்களை படித்தார்கள். மேலும் அலுவலக விவகாரங்களை நிறைவேற்றுவதில் மும்முரமாக இருந்தார்கள். ஜுமுஆ நாளன்று New zealand மண் ஓர் அசாதாரண முக்கியத்துவத்தை கொண்டதாகவும், வரலாற்று சிறப்புமிக்க நாளாகவும் இருந்தது. உலகின் ஓர் எல்லையோர பூமியாக நியூஸிலாந்து கூறப்படுகின்றது.

அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்தின் பைத்துல் முகய்யத் என்ற பள்ளிவாசலின் திறப்பு விழா ஜுமுஆ குத்பாவுடன் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஹுஸூர் (அய்ய) அவர்களின் இந்த குத்பா ஜுமுஆ உலகின் இந்த எல்லையிலிருந்து உலகின் ஏனைய அனைத்து எல்லைகள் வரை MTA மூலமாக நேரடியாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. முழு உலகின் நாடுகளிலும், ஜமாஅத்துகளிலும் இந்த குத்பா ஜுமுஆ பார்க்கப்பட்டும், கேட்கப்பட்டும் கொண்டிருந்தது.

நியூஸிலாந்து ஜமாஅத் உருவாகி 25 ஆண்டுகள் முழுமையடைந்ததையொட்டி 2013 ஆம் ஆண்டு வெள்ளி விழா ஆண்டாக கொண்டாடப்படுகிறது. ஜுமுஆ நாளான இன்று அவர்களின் 25 ஆவது ஆண்டு மாநாடும் ஆரம்பமாகி இருந்தது. அவர்களின் இந்த வெள்ளி விழா ஆண்டு மாநாட்டிலும் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் நேரடியாக கலந்து கொண்டிருந்தார்கள். இன்றைய மிகவும் அருளுக்குரிய நாள் அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்து வரலாற்றில் எப்போதும் நினைவு கூறப்படும்.

இறை ஜமாஅத்துகளின் வரலாற்றில் இதுபோன்ற சில நாட்கள் வருவதுண்டு. அதில் எதிர்காலத்திற்கான மகத்துவமிக்க வெற்றிகளுக்கான அடித்தளம் நாட்டப்படுகின்றது. மேலும் வெற்றிகளின் புதிய வாசல்கள் திறக்கப்படுகின்றன. இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்தும் அல்லாஹ்வின் இந்த முதல் வீட்டின் கட்டுமானத்துடன் வெற்றிக்கான ஒரு புதிய காலகட்டத்தில் நுழைந்து கொண்டிருக்கின்றது. அல்லாஹ் தனது அருளால் இந்த புதிய காலகட்டத்தை அசாதாரண அருட்களை பெறக்கூடியதாக ஆக்கி விடுவானாக.

### மஸ்ஜித் பைத்துல் முகய்யதின் திறப்பு விழா

ஹுஸூர் (அய்ய) அவர்கள் தமது இருப்பிடத்திலிருந்து மஸ்ஜித் பைத்துல் முகய்யதிற்கு 1 மணியளவில் வருகை தந்தார்கள். முதலில் பள்ளிவாசலின் வெளிப்புற சுவரில் பதிக்கப்பட்டிருந்த பலகையின் திரையை திறந்து வைத்து துஆ செய்து வைத்தார்கள். அதன் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் பள்ளிவாசலுக்குள் சென்றார்கள். மேலும் குத்பா ஜுமுஆ வழங்கினார்கள்.

### குத்பா ஜுமுஆ

தஷஹ்ஹுத், தவ்வுத் மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கீழ்க்கண்ட திருக்குர்ஆன் வசனங்களை ஓதி அதன் மொழியாக்கத்தை எடுத்துக் கூறினார்கள்.

فِيْ بُيُوْتٍ اَذِنَ اللّٰهُ اَنْ تُرْفَعَ وَيُذْكَرَ فِيْهَا اسْمُهٗ ۙ يُسَبِّحُ لَهٗ فِيْهَا بِالْغُدُوِّ وَالْاٰصَالِ ۙ﴿٣٧﴾

رِجَالٌ ۙ لَّا تُلْهِيْهِمْ تِجَارَةٌ وَّلَا بَيْعٌ عَنْ ذِكْرِ اللّٰهِ وَاِقَامِ الصَّلٰوةِ وَاِيْتَآءِ الزَّكٰوةِ ۙ

يَخَافُوْنَ يَوْمًا تَتَقَلَّبُ فِيْهِ الْقُلُوْبُ وَالْاَبْصَارُ ۙ﴿٣٨﴾

لِيَجْزِيَهُمُ اللّٰهُ اَحْسَنَ مَا عَمِلُوْا وَيَزِيْدَهُمْ مِّنْ فَضْلِهٖ ؕ وَاللّٰهُ يَرْزُقُ

مَنْ يَّشَآءُ بِغَيْرِ حِسَابٍ

இந்த வசனங்களின் பொருள்: எந்த வீடுகள் உயர்த்தப்பட வேண்டுமென்றும் அவற்றின் அவனது பெயர் நினைவு கூரப்பட வேண்டுமென்றும் இறைவன் கட்டளையிட்டுள்ளானோ அந்த வீடுகளில் (இந்த விளக்கு) உள்ளது. அவற்றில் அவனது தூய்மை, காலை நேரங்களிலும் மாலை வேளைகளிலும் எடுத்துரைக்கப்படுகின்றது. (இவ்வாறு நினைவு கூரும்) ஆண்களைக் கொடுக்கல் வாங்கல் தொடர்புகளோ, வணிகத் தொழிலோ அல்லாஹ்வை நினைவு கூருவதிலிருந்தும் தொழுகையை நிறைவேற்றுவதிலிருந்தும் ஸகாத்து கொடுப்பதிலிருந்தும் கவனமற்றவர்களாக்குவதில்லை. உள்ளங்களும், கண்களும் கலங்கும் ஒரு நாளைக் குறித்து அவர்கள் அஞ்சுகின்றனர். இதன் பயனாக அல்லாஹ் அவர்களுக்கு அவர்களின் செயல்களுக்குரிய மிகச் சிறந்த கூலி வழங்கி தன் அருளால் அவர்களுக்கு(ப் பொருட் செல்வத்தையும் குழந்தைச் செல்வத்தையும்) மிகுதியாக வழங்குவான். மேலும் அல்லாஹ் தான் நாடியவருக்கு (வாழ்க்கைகப் பொருட்களை) அளவின்றி வழங்குகின்றான். (24:37–39)

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் நியூஸிலாந்திற்கு அல்லாஹ் முறையாக தனது பள்ளிவாசலை கட்டுவதற்கு நற்பாக்கியம் வழங்கியுள்ளான். அல்லாஹ் ஜமாஅத்திற்காக இந்த பள்ளிவாசலை எல்லா வகையிலும் அருளுக்குரியதாக ஆக்குவானாக. நியூஸிலாந்து ஜமாஅத் சிறிய ஜமாஅத் ஆகும். சிறியவர், பெரியவர் என அனைவரையும் சேர்த்து மொத்தம் 400 நபர்கள் உள்ளனர். ஆனால் அல்லாஹ்வின் அருளால் பெரிய, நல்ல மற்றும் அழகான பள்ளிவாசலை கட்டியுள்ளனர். இந்த ஜமாஅத்தின் தற்போதைய எண்ணிக்கையை விட அதிகமான இடம் பள்ளிவாசலில் உள்ளது. விரைவாக இந்த இடமும் நிறைந்து விட அல்லாஹ் அருள் செய்வானாக.

ஹுஸூர் அன்வர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: பணி செய்யக்கூடிய ஏராளமான நபர்கள் இரவு, பகலாக கடினமாக பணி செய்துள்ளனர். சில ஜமாஅத் உறுப்பினர்கள் பகலா, இரவா? என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல் கடுமையாக உழைத்ததாக எனக்கு கூறப்பட்டுள்ளது. அவர்கள் மிகுந்த ஆர்வத்துடனும், உணர்வுடனும் இங்கு தொண்டாற்றி உள்ளனர். சுயமே பணி செய்து செலவுகள் சேமிக்கப்படுகின்ற நமது மரபுகளுக்கேற்ப பணி செய்யப்பட்டுள்ளது. இதில் பள்ளிவாசல், ஹால் மற்றும் ஏனைய விஷயங்களை சேர்த்து மொத்தம் 3.5 மில்லியன் செலவாகியுள்ளது. அதில் 1.3 மில்லியன் தொகை பள்ளிவாசலுக்கு செலவாகியுள்ளது. மீதமுள்ள பணம் கிச்சன் மற்றும் Renovation வகைக்கு செலவாகியுள்ளது. குறைவான எண்ணிக்கையின் காரணமாக உடனடியாக ஜமாஅத்தால் இவ்வளவு பெரிய தொகையை ஒன்றுகூட்ட முடியவில்லை. அல்லது செய்த வாக்குறுதியை முழுமை செய்ய முடியவில்லை. எனவே கடனும் வாங்க நேரிட்டது. ஆனால் எனக்கு நம்பிக்கை உள்ளது. இன்ஷா அல்லாஹ் ஜமாஅத் உறுப்பினர்கள் விரைவாக இந்த கடனை அடைத்து விடுவார்கள். ஏனென்றால் ஜமாஅத் இங்கு நிலைபெற்று 25 வருடங்கள் ஆகி விட்டன. எனவே ஜமாஅத்திற்கு மிகவும் கடுமையான ஆசை இருந்தது. நிச்சயமாக இந்த ஆசை இருக்கும் என்று நான் கருதுகின்றேன். அதாவது ஜமாஅத்தின் எண்ணிக்கை குறைவாக இருந்தபோதிலும் குறைந்தபட்சம் அல்லாஹ்வின் சந்நிதானத்தில் ஒரு பள்ளிவாசலை நிச்சயம் அன்பளிப்பாக வழங்க வேண்டும் என்பதே அவர்களின் ஆசையாகும். அல்லாஹ்வின் வீட்டை கட்டுவதன் வழியில் இந்த அன்பளிப்பு வழங்கப்பட வேண்டும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: எனவே இதனை

*(தொடர்ச்சி 10 வது பக்கம்...)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad